பக்கங்கள் 22 + 04

# மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 சித்திரை 08 ஞாயிற்றுக்கிழமை 21.04.2024 அதிர்வு 265

## ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் கோர விபத்தில் பலி!



எல்பிட்டிய பிரதான வீதியில் கெடபல பகுதியில் இடம்பெற்ற விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் 04▶





# இரண்டாகப் பிளவுபட்டுள்ள சு.கவில் பதில் தலைவராக விஜயதாஸ நியமனம்

## சந்திரிகா ஆதரவு அணிக்கு எதிராக

## மைத்திரி தரப்பு அதிரடி நடவடிக்கை




ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பதில் தலைவராக நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ நியமிக்கப்பட்டுள்ளார்.

சுதந்திரக் கட்சியின் நிறைவேற்றுக் குழுவான மைத்திரி அணி இன்று, கொழும்பிலுள்ள தனியார் விடுதியொன்றில் கூடியிருந்தது. அதன்போது, கட்சியின் நிறைவேற்றுக் குழுவின் ஏகமனதான 04▶

# நீதியை மறைத்து வைக்க முடியாது!

## ஈஸ்டர் தாக்குதல் நினைவேந்தல் நிகழ்வில் பேராயர் சுட்டிக்காட்டு



நீதியை மறைத்து வைக்க முடியாது எனவும், உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின் பின்னணியில் உள்ள அனைத்து உண்மைகளையும் கண்டறிய சுதந்திரமானதும், நியாயமானதுமான விசாரணையை மீண்டும் ஆரம்பிக்க வேண்டும் எனவும் பேராயர் [illegible]தினால் 04▶

## 8 வயது மாணவன் நீரில் மூழ்கிச் சாவு!



பாடசாலை மாணவன் ஒருவன் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். 04▶

## புஸ்ஸல்லாவையில் இளைஞரின் சடலம்!



கண்டி மாவட்டம், புஸ்ஸல்லாவை – பெரட்டாசி மேமலை பகுதியில் இளைஞர் 04▶






# மட்டு. சீயோன் தேவாலயத்தில் ஈஸ்டர் தாக்குதல் நினைவேந்தல்

(கனகராசா சரவணன் )

மட்டக்களப்பு சீயோன் தேவாலயத்தில் உயிர்த்த ஞாயிறு தினமன்று இடம்பெற்ற குண்டுத் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் 5ஆம் ஆண்டு நினைவேந்தலையொட்டி இன்று மலர் வைத்து மெழுகுவர்த்தி ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

சீயோன் தேவாலயத்தில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதலில் 14 சிறுவர்கள் உட்பட 31 பேர் உயிரிழந்ததுடன் 80 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

இந்தக் குண்டு வெடிப்பில் உயிரிழந்தவர்களின் 5ஆம் ஈண்டு நினைவேந்தலையொட்டி சீயோன் தேவாலயத்தில் போதகர் மகேசன் ரொசான் தலைமையில் விசேட ஆராதனை இடம்பெற்றது.

அதேவேளை, குண்டு வெடிப்பில் பாதிக்கப்பட் தேவாலயப் பகுதி இதுவரை புனர்நிர்மாணம் செய்யப்படாமல் பூட்டப்பட்டு இருந்து வருகின்ற நிலையில், உயிரிழந்தவர்களின் உறவினர்கள் இன்று அங்கு சென்று மலர் வைத்து மெழுகுவர்த்தி ஏற்றி மௌன அஞ்சலி செலுத்தினர்.








# 1700 ரூபா நாள் சம்பளம் வேண்டும்!

## கொட்டகலை நகரில் ஆர்ப்பாட்டம்

(தலவாக்கலை நிருபர்)

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படை நாள் சம்பளமாக 1700 ரூபா வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்தி கொட்டகலை நகரில் இன்று ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கொட்டகலை பிரதேச சபையின் முன்னாள் தலைவரும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் அமைப்பாளருமான ராஜமணீ பிரசாத்தின் ஏற்பாட்டில் நூற்றுக்கணக்கான மக்களின் பங்கேற்புடன் இந்தப் போராட்டம் நடை பெற்றது.

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 1700 ரூபா நாள் சம்பளமாக வழங்குமாறு வலியுறுத்தி கொட்டகலை நகர வர்த்தகர்கள் கடைகள் அனைத்தையும் மூடி கறுப்புக் கொடிகளைப் பறக்கவிட்டிருந்தனர்.








# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## புஸ்ஸல்லாவை...

ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அந்தப் பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்என்றுதெரிவிக்கப்படுகின்றது.

நீரோடையொன்றிலிருந்து இன்று காலை பிரதேச மக்களால் மேற்படி இளைஞரின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இளைஞரின் மரணத்துக்கான காரணம் கண்டறியப்படாத நிலையில், புஸ்ஸல்லாவைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## இரண்டாகப்...

தீர்மானத்துக்கமைய, அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ சுதந்திரக் கட்சியின் பதில் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார் என்று கட்சியின் பதில் பொதுச்செயலாளர் துஷ்மந்த மித்ரபால எம்.பி. தெரிவித்துள்ளார்.

சுதந்திரக் கட்சியின் தலைவராகச் செயற்பட்டு வந்த முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தொடர்ந்தும் அந்தப் பதவியில் செயற்படுவதற்கு கொழும்பு மாவட்ட நீதிமன்றம் இடைக்காலத் தடைவிதித்துள்ளது. இதையடுத்து சுதந்திரக் கட்சி மைத்திரி அணி, சந்திரிகா அணி என இரண்டாகப் பிளவுபட்டுள்ளது.

இந்நிலையில், சுதந்திரக் கட்சியின் பதில் தலைவராக அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவை கட்சியின் அரசியல் குழுவான முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் ஆதரவு அணி கடந்த 8 ஆம் திகதி நியமித்தது.

அந்த நியமனம் சட்டவிரோதமானது என்று சுதந்திரக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் துஷ்மந்த மித்ரபால தெரிவித்திருந்தார்.

தலைவரின் பங்கேற்பு இல்லாமல் எந்த அரசியல் குழுக் கூட்டத்தையும் நடத்த முடியாது எனவும், தலைவரின் அறிவுறுத்தலின் பேரில் மட்டுமே கட்சி செயலாளர் அவ்வாறான கூட்டத்தைக் கூட்ட முடியும் எனவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

இதேவேளை, நேற்று சுதந்திரக் கட்சியின் பதில் செயலாளரினால் நடத்தப்பட்டதாக கூறப்படும் கூட்டம் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்குச் சந்திரிகாவுடன் இணைந்து செயற்படும் குழுவினர் கலந்தாலோசித்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அதேநேரம், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சட்டவிரோதமான அரசியல் குழுக் கூட்டமொன்று நேற்று இடம்பெற்றுள்ளது என்று அந்தக் கட்சியின் தேசிய அமைப்பாளர் துமிந்த திஸாநாயக்க எம்.பி. குற்றம் சுமத்தியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கட்சியின் தலைவர் பதவியை வகிப்பதற்கு கொழும்பு மாவட்ட நீதிமன்றம் இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பித்துள்ள பின்னணியிலேயே இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது என்றும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

## 8 வயது...

புத்தளம் – ஆராச்சிக்கட்டுவ கட்டுபத மஹாவெவயில் குடும்பத்துடன் நீராடச் சென்ற பாடசாலை மாணவனே நீரில் மூழ்கி நேற்று உயிரிழந்துள்ளார் என்று ஆராச்சிக்கட்டுவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஆராச்சிக்கட்டுவ, நல்லதரன்கட்டுவ, இலக்கட்டுவ பகுதியைச் சேர்ந்த 8 வயதுடைய தினேத் சத்சர என்ற பாடசாலை மாணவனே உயிரிழந்துள்ளார்.

தாயின் சகோதரி, அவரது இரண்டு பிள்ளைகள் மற்றும் மற்றுமொரு அயலவர் ஆகியோருடன் நீராடுவதற்காகச் சென்றபோதே மேற்படி மாணவன் இந்த அனர்த்தத்துக்கு முகம் கொடுத்துள்ளார் என்று பொலிஸ் விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் ஆராச்சிக்கட்டுவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## நீதியை...

மெல்கம் ரஞ்சித் தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் இடம்பெற்று 5 வருடங்கள் நிறைவடைந்துள்ளதையொட்டி கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயத்தில் இன்று நடைபெற்ற விசேட நிகழ்விலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

குறித்த தேவாலயத்தில் இன்று காலை 8.40 மணிக்கு விசேட ஆராதனை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் தலைமையில் இந்த ஆராதனை நிகழ்வுகள் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் சர்வமதத் தலைவர்கள் மற்றும் வெளிநாட்டுத் தூதுவர்களும் கலந்துகொண்டிருந்தனர்.

அதேநேரம், நாடளாவிய ரீதியிலுள்ள பல தேவாலயங்களிலும் 2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தினத்தில் இடம்பெற்ற தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்காக விசேட ஆராதனைகள் இடம்பெற்றன.

இதேவேளை, உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலில் உயிரிந்தவர்களை நினைவுகூர்ந்து நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்து தேவாலயங்களிலும் இன்று காலை 8.45 மணி முதல் இரண்டு நிமிடங்கள் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

அதன்படி சகல தேவாலயங்களிலும் மணி ஒலிக்கவிடப்பட்டதைத் தொடர்ந்து மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதேவேளை, உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின் 5 ஆம் ஆண்டு நினைவு நாளையொட்டி கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயத்தில் நேற்று மாலை விசேட ஆராதனை நடைபெற்றது.

இந்த ஆராதனையின் பின்னர் அருட் தந்தைமார்கள், தாக்குதலில் உயிரிழந்தவர்களின் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் கத்தோலிக்கச் சமூகத்தினர் கலந்து கொண்ட நடைபயணம் குறித்த தேவாலயத்திலிருந்து கட்டுவாப்பிட்டிய புனித செபஸ்தியார் தேவாலயத்தை நோக்கி ஆரம்பமானது.

இந்த நடைபயணம் இன்று காலை 7.30 மணியளவில் கட்டுவாப்பிட்டிய புனித செபஸ்தியார் தேவாலயத்தைச் சென்றடைந்திருந்தது.

2019 ஆம் ஆண்டில் ஏப்ரல் 21 ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தினமன்று கத்தோலிக்க தேவாலயங்கள் மற்றும் சுற்றுலா விடுதிகள் உட்பட 8 இடங்களில் நடத்தப்பட்ட தாக்குதல்களில் 300 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்ததுடன் 400 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்திருந்தனர்.

## ஒரே...

பலியாகியுள்ளனர். மேலும் மூவர் காயமடைந்துள்ளனர்.

ஓட்டோ ஒன்றும், கொள்கலன் வாகனம் ஒன்றும் மோதுண்டதாலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

ஒருவர் சம்பவ இடத்திலேயே பலியானார். மேலும் இருவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளனர்.

விபத்தில் காயமடைந்த மூவர் எல்பிட்டிய ஆதார வைத்தியசாலையிலும், கராப்பிட்டிய வைத்தியசாலையிலும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

ஓட்டோ சாரதியான கலிங்க நிஹால் சோமரத்ன என்ற 68 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையும், அவரது 10 வயது பேரனும், 7 வயது பேத்தியுமே விபத்தில் உயிரிழந்துள்ளனர்.

ஓட்டோ சாரதியின் மனைவி (வயது 61) மற்றும் அவரது மகள் (வயது 35) ஆகியோர் காலி கராப்பிட்டிய வைத்தியசாலையிலும், அவரது பத்து வயது பேத்தி எல்பிட்டிய வைத்தியசாலையிலும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.





# உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலில் இறந்தோருக்கு மட்டுவில் அஞ்சலி!

(பழுவூரான்)

மட்டக்களப்பில் 2019.04.21 அன்று இடம்பெற்ற ஈஸ்டர் குண்டுத் தாக்குதலில் உயிரிழந்த உறவுகளுக்கு இன்று ஞாயிற்றுக்கிழமை (21) உணர்வு பூர்வமாக அஞ்சலி செலுத்தப்பட்டது.

மட்டக்களப்பு மாநகர சபையால் உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலில் உயிரிழந்த உறவுகளுக்காக, மட்டக்களப்பு காந்திப் பூச்கா வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள நினைவுத் தூபியில் காலை 7 மணிக்கு சமய ஆராதனைகளுடன் உணர்வு பூர்வமாக அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதன்போது மட்டக்களப்பு மாநகர சபையின் முன்னாள் முதல்வர் தியாகராஜா சரவணபவன், முன்னாள் பிரதி முதல்வர் கந்தசாமி சத்தியசீலன் மற்றும் முன்னாள் மாநகரசபை உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.







# வாகனத்துடன் மோதியதில் வீதியில் இறந்த மாடுகள்

(பாறுக் ஷிஹான்)

விபத்தொன்றில் இரு மாடுகள் இறந்த சம்பவம் அம்பாறை சம்மாந்துறை பிரதான வீதியில் இடம்பெற்றுள்ளது.

இன்று (21) அதிகாலை அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பிரதேச சபை எல்லைக்கு உட்பட்ட சம்மாந்துறை தொழிநுட்பக் கல்லூரிக்கு அருகே வீதியில் கட்டாக்காலிகளாக திரிந்த இரு மாடுகள் வாகனத்துடன் மோதுண்டு இறந்துள்ளன.

அதிகாலை இடம்பெற்றுள்ளதால் எந்த வாகனத்துடன் மோதின என்பது தொடர்பில் விவரம் தெரியவரவில்லை.

விபத்து தொடர்பாக சம்மாந்துறை பொலிஸ் மற்றும் சம்மாந்துறை பிரதேச சபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் சம்மாந்துறை பகுதி வீதிகளில் கட்டாக்காலி மாடுகள், ஆடுகள், நாய்கள் அதிகம் உலாவி திரிவதாக பொதுமக்கள் குற்றஞ் சுமத்துகின்றனர்.

அத்துடன் திண்மக் கழிவுகள் உரிய முறையில் அகற்றாமையால் கட்டாக்காலிகளின் தொல்லை தினமும் இந்தப் பகுதியில் அதிகரித்துள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

**நமது கருத்து**
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# நாய் வால் இது!

இன்னும் ஐந்து முதல் ஆறு மாதங்களுக்கு இடையில் நாட்டில் ஜனாதிபதித் தேர்தல் ஒன்று நடைபெறுவது உறுதியாகி விட்டது.

ஜனாதிபதித் தேர்தல் என்றதும் வழமையாக வெளியாகும் கோரிக்கை ஒன்று இப்போதும் வெளியாகியுள்ளது.

''எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமையை நீக்குவது தொடர்பாக அரசியல் கட்சிகள் மற்றும் கூட்டணிகளின் நிலைப்பாட்டை தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெளிவாக வெளிப்படுத்தவேண்டும்'' - என்று சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

''நாட்டின் நீண்டகாலமாகவே நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. அது தொடர்பில் பதவிக்கு வருவதற்கு முன்னதாக அனைத்து வேட்பாளார்களும் வாக்குறுதிகளை அளிக்கின்றபோதும் தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் அவர்கள் அம்முறையை நீக்குவது தொடர்பில் கரிசனைகளை வெளிப்படுத்துவதில்லை. இவ்வாறான நிலையில் இந்த ஆண்டில் ஜனாதிபதி தேர்தல் நடைபெறவுள்ளது. நாம் நாடாளவிய ரீதியில் உள்ள சமூகக் குழுக்களுடன் உரையாடல்களைச் செய்து வருகின்றதன் அடிப்படையில் அனைத்து இன சமூகங்களும் நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமை நீக்கப்பட வேண்டும் என்ற கருத்துக்களைக் கொண்டிருப்பது புலப்படுகின்றது. அந்தவகையில், எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுபவர்கள், மக்களின் ஆணையைப் பெறுவதற்கு முன்னதாக தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கம், அதற்கான கால வரையறை உள்ளிட்ட விடயங்களை வெளியிட வேண்டும்.'' - என்று அவர் கோரியிருக்கின்றார்.

மக்கள் மத்தியில் பணியாற்றும் அவரது சிவில் அமைப்பு சுட்டிக் காட்டுவது போல நாட்டில் பெரும்பாலான மக்கள் மனதில் - சமூகங்கள் மத்தியில் - இந்த நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமை ஒழிக்கப்பட வேண்டும் என்ற கருத்தியல் ஆழ வேரூன்றியிருப்பது வெளிப்படையானது.

தேர்தல் சமயங்களில் மக்கள் மனதை வென்று, வாக்குகளைச் சுருட்டுவதற்காக மக்களின் கருத்துடன் ஒத்திசைபவர்கள் போல காட்டி, நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமையை ஒழிப்போம் என்று வாக்குறுதி அளித்து, சத்தியம் செய்யும் அரசியல்வாதிகள், வென்று ஜனாதிபதியானதும் அந்த நிறைவேற்றுதிகாரப் பதவியின் அதிகாரங்களை ருசிப்பதில் கவனத்தையும் ஈடுபாட்டையும் செலுத்தி, மக்களுக்கு தாம் வழங்கிய உறுதிமொழிகளை மறந்து விடுகிறார்கள்.

இதுதான் கடந்த 30 வருடங்களுக்கு மேற்பட்ட அரசியல் சரித்திரமாக - அனுபவப் பாடமாக - நமது நாட்டில் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது.

ஜனாதிபதிகள் சந்திரிகா குமாரதுங்க, மஹிந்த ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன, ரணில் விக்கிரமசிங்க என இப்பதவியில் கடைசியாக அலங்கரித்த ஐந்து ஜனாதிபதிகளில் கோட்டாபய ராஜபக்ஷவைத் தவிர மற்றைய நால்வருமே இந்த நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமையை ஒழிப்போம் என்று பதவிக்கு வர முன்னர் மக்களுக்கு எழுத்தில் வாக்குறுதி தந்தவர்கள்தான்.

இவர்களில் மஹிந்த ராஜபக்ஷ சற்று மேலே போய், பதவிக்கு வர முன்னர் தாம் வழங்கிய உறுதி மொழிகளைப் பின்னர் மறந்து, அதிகாரத்துக்கு வந்ததும் அரசமைப்பை மாற்றி, இரண்டு தடவைகளுக்கு அப்பால் மூன்றாம் தடவையும் ஜனாதிபதியாக பதவியில் அமர முயற்சி செய்தார்.

கடந்த 46 ஆண்டுகளாக இந்த நாட்டின் அரசமைப்புச்சட்டம் மூலம் நடைமுறையில் இருக்கும் இந்த ஆட்சி முறைமையை மாற்றுவது அவ்வளவு சுலபமானதல்ல. நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை ஆதரவும், அதன் பின்னர் சர்வஜன வாக்கெடுப்பு மூலம் மக்கள் அனுமதியும் அதற்கு நிச்சயம் வேண்டும்.

வாக்குறுதிகளை வழங்கி, அதிகாரத்துக்கு வரும் ஜனாதிபதிகள் இந்தத் தேவைப்பாடுகளையே நெருக்கடியாக - இயலாமையாக - காட்டி அந்த மாற்றத்தை செய்யாமலேயே பதவிக் காலத்தை ஓட்டி விடுவதுதான் நடைமுறையில் நடப்பது. இனியும் அதுதான் தொடரும்.

மக்கள் விருப்பம் எத்தகையதாக இருந்தாலும், இந்த ஆட்சி முறைமையை மாற்றுவது என்பது இலங்கை அரசியல் வாதிகள் மத்தியில் நாய் வாலை நிமிர்த்துவதற்கு ஒப்பான முயற்சிதான்!



# மட்டுவில் தீர்க்கப்படாத 55 பிரச்சினைகள் தொடர்பில் அரச அதிபருடன் கலந்தாய்வு!

மட்டக்களப்பு மாவட்டத்தில் பிரதேச செயலக ரீதியாக இதுவரை காலமும் தீர்க்கப்படாத பல 55 பிரச்சினைகள் சம்பந்தமாகவும் அவற்றை தீர்ப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி ஜே. முரளீதரனுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் இ.சாணக்கியன் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தின் பிரகாரம் சிறப்பு கூட்டம் ஒன்று மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் தலைமையில் மட்டக்களப்பு செயலகத்தில் கூட்டப்பட்டது.

அந்தக் கூட்டத்தின் பிரகாரம் முன் வைக்கப்பட்ட கோரிக்கைகள் ஆராயப்பட்டு அதற்கான தீர்வு திட்டங்களும் முன் மொழியப்பட்டுள்ளன என்று இ.சாணக்கியன் எம்.பி. தெரிவித்துள்ளார்.

முன்மொழியப்பட்ட, பிரதேச செயலக மட்டங்களில் தீர்க்கப்படாத பிரச்சினைகள் வருமாறு,

1. மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலகப் பிரிவில் குறுமண்வெளி, குருக்கள்மடம், போரதீவுப்பற்று, வெல்லாவெளி பிரதேச செயலகப் பிரிவில் மண்டூர், மண்முனை தென் மேற்கு, பட்டிப்பளை பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள அம்பிளாந்துறை போன்ற பாதைகளின் இறங்கு துறையின் பணிகள் அனைத்தும் இவ்வருடத்தில் புனரமைப்புச் செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

2. மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட களுவாஞ்சிகுடி ஆதார வைத்திய சாலைக்குத் தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ சட்ட வைத்திய அதிகாரியை நியமிக்க உடனடி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

3. களுவாஞ்சிகுடி ஆதார வைத்திய சாலையில் அரச ஒசுசல கட்டட வசதிகள் உள்ளன. எனவே வைத்தியசாலைக்கு இதை கொண்டு வருவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

4. களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலையில் எண்டோஸ்கோப் வசதியானது இதுவரை காலமும் இல்லை. அந்த வசதியினை அமைத்துக் கொடுப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.

5. களுதாவளை பிரதேசத்தில் வெங்காயம், மிளகாய் பயிர்ச் செய்கை மழை காலங்களில் முற்றாக பாதிக்கப்பட்டுள்ளது. இதற்கான நஷ்டஈடு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

6. குருக்கள் மடத்தில் விளையாட்டு மைதானத்தின் ஒருபகுதியை இராணுவத்தினர் தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்துள்ளனர். இதனை விடுவிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

7. ஓந்தாச்சிமடம் கடற்கரையில் சுற்றுலாத்தளம் அமைத்தல் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

8. பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தினருக்கு பிரேத பெட்டிகள் தயாரிப்பதற்கான ஒதுக்கீடுகள் வரும் எனக் கூறியும் இதுவரையும் வழங்கப்படவில்லை. இவ் ஒதுக்கீடுகள் வருமா?

9. மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபைக்கு இதுவரை காலமும் அமரர் ஊர்தி இல்லை. மிக விரைவில் அமரர் ஊர்திக்கான வாகனம் நடைமுறைக்கு கொண்டு வரப்பட வேண்டும்.

10. களுவாஞ்சிகுடி உட்பட ஏனைய பகுதிகளில் பல வீடுகளில் திருட்டுச் சம்பவம் இடம்பெறுகின்றது. எனவே இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

11. களுவாஞ்சிகுடி 8 ஆம் வட்டாரத்தில் அமைந்துள்ள முன்பள்ளி பாடசாலை தொடர்பான பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும்.

12. பெரியகல்லாறு கிராமத்துக்கும் அம்பாறை மாவட்ட பெரிய நீலாவணை கிராமத்துக்குமான எல்லைப் பிரச்சினை இதுவரை காலமும் தீர்க்கப்படாமல் உள்ளது. இதனை முடிவுக்கு கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

13. களுவாஞ்சிகுடி பொது மைதானத்தில் அமைந்துள்ள சிறுவர் விளையாட்டு பூங்காவை கடற்கரைக்கு இடமாற்றம் செய்தல் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

14. துறைநீலாவணை கிராமத்துக்குச் செல்லும் வீதிக்கு அருகாமையில் சட்டவிரோதமாக கட்டடம் அமையப் பெற்றுள்ளது. அதனை உடனடியாக அகற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

15. மண்டூர் ஒல்லிமடுவலில் மிக நீண்ட நாள்களாகத் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்குச் சொந்தமான நீர்தாங்கி முடிவுறாமல் உள்ளது. இதனை உடனடியாக முடித்து மக்களின் பாவனைக்கு வழங்கல்.

16. போரதீவுப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பாலையடிவட்டை பிரதேசத்தில் 1978 ஆம் ஆண்டு ஏற்பட்ட சூறாவளியின் போது சேதமடைந்த பசளை களஞ்சிய சாலை மற்றும் நெற் களஞ்சிய சாலை என்பன இதுவரை காலமும் மீள் நீர்மாணம் செய்ய வில்லை. இவற்றை மீள் நீர்மாணம்

(08ஆம் பக்கம் பார்க்க)

# மட்டுவில் தீர்க்கப்படாத 55 பிரச்சினைகள் தொடர்பில் அரச அதிபருடன் கலந்தாய்வு!

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

செய்வதற்கான துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

17. போரதீவுபற்று பிரதேச செயலக பிரிவில் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கு திணைக்களத்தினால் அங்கிகரிக்கப்பட்ட மருத்துவ மாதுவை விட தற்போது சனத்தொகைக்கு ஏற்ப அதிகமான தேவைப்பாடாக உள்ளது. எனவே உடனடியாக தேவையாக உள்ள ஆளணியை நடைமுறைப்படுத்த நடவடிக்கை வேண்டும்.

18. போரதீவுப்பற்று வெல்லாவெளி பிரதேச செயலகப் பிரிவில் ஏ.எஸ்.எம்.பி. திட்டம் தொடர்பில் மக்கள் மத்தியில் சில அதிருப்தி காணப்படுகின்றது. இப்பிரச்சினை நிவர்த்தி செய்யப்பட வேண்டும்.

19. போரதீவுப்பற்று வெல்லாவெளி பிரதேச செயலகப் பிரிவில் சட்டவிரோத மண் அகழ்வு இடம்பெறுகின்றது. இது முற்றாக தடை செய்யப்பட வேண்டும்.

20. போரதீவுப்பற்று வெல்லாவெளி பிரதேச சபையில் இருக்கும் அமரர் ஊர்திக்கு ஐயாயிரம் ரூபா அறவிடப்பட்டது. தற்போது பதினையாயிரம் ரூபாவாக உயர்ந்துள்ளது. இதற்கான காரணம் என்ன என்பது உடனடியாக ஆராயப்பட வேண்டும்.

21. போரதீவுப்பற்று வெல்லாவெளி பிரதேச செயலகப் பிரிவில் நீர்ப்பாசனம் தொடர்பாக உலக வங்கியின் நிதியின் கீழ் மேற்கொள்வதாக அமைச்சர் மூலமான கடிதம் அனுப்பப்பட்டது. மூன்று வேலைகளில் ஒரு வேலை இன்னும் இடை நிறுத்தப்பட்டுள்ளது. இந்தப் பணத்தைக் குறைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

22. போரதீவுப்பற்று வெல்லாவெளி பிரதேச செயலகப் பிரிவில் பண்ணையாளர்களுக்கான மேய்ச்சல் தரை திபுலாணை பகுதியில் அமையப் பெறுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

23. பட்டிப்பளை பிரதேசத்தில் மிக நீண்ட காலமாக இலங்கை மின்சார சபைக்கான அலுவலகம் நிர்மாணிப்பது தொடர்பாக திட்டமிடப்பட்டது. ஆனால் இதுவரை காலமும் அதற்கான எந்தவித ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்படவில்லை. இதனை உடனடியாக நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

24. மண்முனை தென்மேற்கு, பட்டிப்பளை பிரதேச செயலகப் பிரிவில் மகிழடித்தீவு இறால் பண்ணைகளின் சில தெரிவுகள் பற்றி சில கேள்விகள் மக்களால் எழுப்பப்பட்டுள்ளது. தெரிவு செய்யப்பட்ட சில பயனாளிகள் பொருத்தமற்றவர்கள் எனவும் மக்களால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இது பற்றி ஆராய்ந்து சரியான பயனாளர்களுக்கு கிடைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

25. மண்முனை, கெவிலியாமடுவில் ஊர்காவற்படையினருக்கு தலா 3 ஏக்கர் வீதம் வனவளத்துக்குச் சொந்தமான காணி வழங்கப்பட்டுள்ளது. தொடர்ந்து இந்தத் திட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இது தொடர்பாக ஆராய்ந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

26. மண்முனை தெற்கு, மேற்கு, பட்டிப்பளை பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட அம்பிளாந்துறை பிரதேசத்தில் ஆரம்ப சிகிச்சைக்கான பராமரிப்பு பிரிவை அமைப்பதற்கான நடவடிக்கையைத் துரித கதியில் மேற்கொள்ள வேண்டும்.

27. மண்முனை மேற்கு, வவுணதீவு எல்லைக்குட்பட்ட நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபைத் திட்டத்தின் ஒரு பகுதியாக வேள்ட் விஷன் சமூக மட்ட அமைப்புக்கு வழங்கப்பட்ட நீர் இணைப்பில் நீர் கசிவு ஏற்பட்டுள்ளது. இது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

28. மண்முனை மேற்கு வவுணதீவு பிரதேச செயலகப் பிரிவில் வோலர் பனல் அமைப்பதற்கு பெரியளவில் காணிகள் கோரப்பட்டுள்ளன. இக்காணிகளை வழங்குவதற்கு முன் மின்சார சபையினருடன் ஒப்பந்தம் செய்துள்ளார்களா? காணி அனுமதி வழங்குவதற்கு முன் இவ்விடயம் தொடர்பாக ஆராயப்பட வேண்டும்.

29. மண்முனை மேற்கு, வவுணதீவு பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட மகிழவட்டவான் கிராமத்தில் அமைந்துள்ள எழுவான் பண்ணையில் சில நபர்களுக்குரிய காணி துண்டுகளும் உள்ளடங்கியுள்ளன. இறுதியாக நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் இது தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

30. ஏறாவூர்பற்று, செங்கலடி பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட மயிலத்தமடு மாதவனை பகுதியில் சட்டவிரோதமாக குடியேறி விவசாய நடவடிக்கையில் ஈடுபடும் நபர்களுக்கு எதிரான உரிய நடவடிக்கை மேற்கொள்ளல்.

31. ஏறாவூர்பற்று செங்கலடி பிரதேச செயலகப் பிரிவில் மயிலத்தமடு, மாதவணை மேய்ச்சல் தரையில் கொல்லப்பட்ட பசுக்களுக்கு நஷ்டஈடு வழங்குவது தொடர்பாக மாவட்ட செயலகம் முன்னெடுக்க வேண்டிய பணிகளை துரிதப்படுத்த வேண்டும்.

32. ஏறாவூர்பற்று, செங்கலடி பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட கார்மலை பிரதேசத்தில் கால்நடைகளுக்காக ஒதுக்கப்பட்ட மேய்ச்சல்தரை இதுவரையும் பண்ணையாளர்களுக்காக பிரகடனப்படுத்தப்படவில்லை. இதனை ஆராய்ந்து வனஜீவராசிகள் திணைக்களத்துடன் இணைந்து பண்ணையாளர்களுக்கு பிரகடனப்படுத்திக் கொடுக்க நடவடிக்கை எடுத்தல்.

33. ஏறாவூர்பற்று, செங்கலடி பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட களுவங்கேணி- 2 கிராம சேவகர் பிரிவில் உள்ள சீனோர் வீட்டுத்திட்டத்தில் சுமார் 100 குடும்பங்கள் வசிக்கின்றனர். இவர்களுக்கான காணி உறுதிகள் இதுவரை வழங்கப்படவில்லை. இதனைத் துரித கதியில் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். (1981 பிரேமதாஸ அவர்கள் ஜனாதிபதியாக இருக்கும் போது இவ் வீட்டுத் திட்டம் வழங்கப்பட்டது.)

34. ஏறாவூர்பற்று, செங்கலடி பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட கரடியனாறு, மாவடிச்சேனை பகுதியில் வாழ்கின்ற மக்கள் நிலக்கடலை பயிர்ச் செய்கையினை மேற்கொண்டு வருகின்றனர். அவர்களுக்கு பயிர் செய்கையை மேற்கொள்வதற்கான அரச காணியினை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அத்தோடு நிலக்கடலைக்கான நிர்ணய விலையை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

35. ஏறாவூர்பற்று, செங்கலடி பிரதேச செயலகப் பிரிவில் புகையிலை சங்கத்தினருக்கு சொந்தமான காணியை வழங்குவதற்கு மாநகர சபையால் இடையூறு விளைவிக்கப்பட்டுள்ளது. எனவே இப்பிரச்சினையை தீர்த்து அவர்களுக்கான காணியை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

36. மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட திராய்மடு சுவிஸ் கிராமத்தில் அரச காணியில் வாழும் மக்களுக்கான உறுதி இதுவரை கிடைக்கப் பெறவில்லை. அவர்களுக்கான உறுதியை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

37. மண்முனை வடக்கு பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட மாந்தீவு என அழைக்கப்படும் காணியில் சிறைச்சாலைக்கு பயன்படுத்துவ தற்கான அனுமதி கோரப்பட்டுள்ளது. இது மாவட்டத்தின் வளமாகவும், பறவைக

(09ஆம் பக்கம் பார்க்க)

# மட்டுவில் தீர்க்கப்படாத 55 பிரச்சினைகள் தொடர்பில் அரச அதிபருடன் கலந்தாய்வு!

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளின் சரணாலயமாகவும் அமைந்துள் ளதால் மட்டக்களப்பு சிறைச்சாலைக்கு அனுமதி வழங்க முடியாது. இது தொடர் பாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

38. மண்முனை வடக்கு பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட சின்ன உப்போடையில் கீரியோடை எனும் இடத்தில் சட்டவிரோதமான முறையில் உரிய அனுமதிகள் பெறப்படாமல் ஆற்றங்கரை அண்டிய பகுதிகளில் மீன்வளர்ப்பு மேற்கொள்ளப்பட்டு வரு கின்றது. இது தொடர்பாக ஆராயப்பட வேண்டும்.

39. கோறளைபற்று வடக்கு, வாகரை பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட வட்டவான் பகுதியில் இறால் பண்ணை கழிவு நீரை காயங்கேணி வாவியில் திறந்து விடுவதால் இவ்வாவியினை நம்பியுள்ள மீனவர்கள் சிரமத்துக்கு உள்ளாகின்றனர். இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

40. கோறளைபற்று வடக்கு, வாகரை பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட கதிரவெளி பகுதியில் அல்கெமி ஹெவி மெடல் தனியார் நிறுவனத் தினால் சட்டவிரோதமான முறையில் இல்மனைற் மணல் அகழ்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வரு கின்றது. எனவே இது தொடர்பாக நட வடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

41. கோறளைபற்று வடக்கு, வாகரை பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்ட பகுதிகளில் காணி நில அபகரிப்பு இடம்பெறுகின்றது. இது விரைவாக தடுத்து நிறுத்தப்பட வேண்டும்.

42. கோறளைபற்று வடக்கு, வாகரை பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட காயங்கேணி கிராமசேவகர் பிரிவில் கடற்கரைக்கு அண்மையில் அமைந்துள்ள காயங்கேணி சரஸ்வதி வித்தியாலயத்தின் (தற்போது பிரதான வீதியில் அமைந்துள்ளது) கட்டடம் மற்றும் மக்களின் காணிகள் பாதுகாப்புப் படையினர் அவர்களின் முகாமாக பயன்படுத்தி வருவதோடு, மீனவ படகு களை கரையோரமாக நிறுத்த வேண் டாம் என அழுத்தம் கொடுக்கப்பட்டு வருவதாகவும் மீனவ மக்களால் கூறப் படுகின்றது. இது தொடர்பாக ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

43. கோறளைபற்று, வாழைச் சேனை பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட கும்புறுமூலை கிராம சேவை யாளர் பிரிவில் மெண்டிஸ் நிறுவ னத்தால் அமைக்கப்பட்டுள்ள தொழிற் சாலையில் இருந்து வெளியேறும் கழிவு நீர் 3 கிலோ நீளமான தோணாவில் கலப்பதால் மீன்கள் அனைத்தும் இறந்த நிலையில் காணப்பட்டது. இதனால் இப்பிரதேச மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக இப்பிரதேச மக்கள் எதிர்ப்புத் தெரி வித்தனர். மெண்டிஸ் கம்பனி சரியான அனுமதியினை பெற்று செயற்படுகின் றதா? என சந்தேகம் வருகின்றது. இவ்விடயம் தொடர்பாக ஆராயப்பட வேண்டும்.

44. கோறளைபற்று, வாழைச் சேனை பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட நாசிவன்தீவு கிராம சேவகர் பிரிவில் முறையான குறித்த பகுதியில் வாழும் மக்களுக்கு குழாய்நீர் இணைப்பு இதுவரையில் வழங்கப்படவில்லை. இருந்தும் சட்டவிரோதமாக திணைக்கள அனுமதியின்றி நிலத்தடி நீரைப் பயன்படுத்தி ஐஸ் தொழிற்சாலை ஆரம் பிக்கப்படவுள்ளது. இது தொடர்பாக ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

45. கோறளைபற்று தெற்கு கிரான் பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட நெல்கலமலை எனும் இடத்தில் அமைந்துள்ள இராணுவ முகாமுக்குள் சட்ட விரோதமான முறையில் விகாரை அமைப்பதற்கான சகல நடவடிக்கைக ளும் முன்னெடுக்கப்படுகின்றது. கடந்த பூரணை தினமான 25.01.2024 அன்று விகாரை அமைப்பதற்கான முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டது. இவ்விடயம் சட்டரீதியாக நிறுத் தப்பட வேண்டும்.

46. கோறளைபற்று தெற்கு கிரான் பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட புணாணை மேற்கு வாகனேரி பிரதே சத்தில் சீக் எனேர்ஜி பிரைவட் லிமிட்ட் நிறுவனத்தால் சூரிய சக்தி மின் திட் டத்துக்காக 352 விவசாய செய்கையில் ஈடுபட்டு வரும் வயல் காணிகள் அடை யாளப்படுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பாக ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

47. கோறளைபற்று தெற்கு கிரான் பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் அனுமதியின்றி சட்டவிரோத மாக மண் அகழ்வு மேற்கொள்ளப்ப டுகின்றது. இது தொடர்பாகக் களவிஜயம் 28.03.2024 அன்று மேற்கொள்ளப் பட்டது. இது தொடர்பாக தெளிவுபடுத்துக.

48. கிரான் பிரதேசத்தில் கிறவல் அகழ்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள் ளது. இந்தக் கிறவலுக்கு உரிய தேவைப் பாடுகள் என்ன என்பதை தெரிவிக் குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

49. மண்முனை பற்று பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட ஏரிக்குளம் உட்பட சில குளங்கள் மூடப்பட்டு நில அபகரிப்பு இடம்பெறுகின்றது. இந்த நிலங்களை தனியார் உரிமை கோரு கின்றனர். இது சட்டத்துடன் தொடர்பு பட்டது. இது தீர்க்கப்பட வேண்டும்.

50. மண்முனை பற்று பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட நாவற்குடா கிழக்கு கிராம சேவகர் பிரிவில் அரச காணி வழங்கப்பட்டவர்களுக்கான காணி உறுதிப் பத்திரம் வழங்கப் படவில்லை. இதனை வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

51. மட்டக்களப்பு மாவட்டத்தில் காட்டு யானைகளின் தாக்கம் அதிகமாகவே உள்ளது. இதனால் மனித உயிர்கள் காவு கொள்ளப்படுகின்றன. எனவே யானை வேலிகளை உடனடியாக அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். (குறிப்பாக போரதீவுப்பற்று பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட தளவாய், ஏறாவூர்பற்று பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட கறுத்தப்பாலம் பகுதியில்)

52. மாவட்டத்தில் நீர்குழாய் இணைப்புக்கள் பற்றாக் குறையாக உள்ளன. இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

53. மாவட்டத்தில் பெரும்போக நெற் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகளுக் கான வெள்ள அனர்த்த காப்புறுதி நஷ்டஈடு 2023, 2024 இற்கு உரியது. இதுவரையில் வழங்கப்படவில்லை. அதனை வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

54. மட்டக்களப்பு மாவட்டத்தில் குடி தண்ணீர் பிரச்சினைகள் சம்பந்தமாக தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையுடன் தொடர்பு கொண்ட போது உள் வீதிகளுக்கான குடி தண்ணீர் விநியோகத்தை மேற்கொள்வதற்கு போதியளவான நீர் குழாய்கள் இல் லாமல் இருப்பதாக தெரியப்படுத்தினார். பிற மாவட்டத்தில் மேலதிக உள்ள குடி தண்ணீர் குழாய்களை கொண்டு வருவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

55. வாகரையில் அமையப் பெற் றுள்ள கடற்கரையை அண்டிய இரா ணுவ முகாம், மற்றும் முறக்கொட்டாஞ் சேனை, பாலையடிவட்டை, தாண்டியடி போன்ற இராணுவ முகாம்கள், களுவாஞ்சிகுடி பொலிஸ் நிலையம் ஆகியவற்றுக்கு அரச காணியை வழங்குவதற்கான நடவடிக்கை மேற் கொள்ளப்பட வேண்டும்.






# வருவாய் குறைந்த குடும்பங்களுக்கு அரிசி வழங்கும் திட்டம் இன்று ஆரம்பம்

## தம்பலகாமம் பிரதேச செயலர் பிரிவில் அங்குரார்ப்பண நிகழ்வு

(ஹஸ்பர் ஏ.எச்.)

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் கொள்கைப் பிரகடனத்துக்கு அமைவாக குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கான அரிசி வழங்கும் திட்டத்தின் கீழ் திருகோணமலை மாவட்டத்தில் அரிசி வழங்கும் நிகழ்வு தம்பலகாமம் பிரதேச செயலர் பிரிவில் இன்று (21) இடம்பெற்றது.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி தலைமையில் கல்மெடியாவ தெற்கு கிராம சேவகரின் பிரிவில் உள்ள முள்ளிப்பொத்தானை விகாரையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவருமான கபில நுவன் அதுகோரள, மாவட்ட அரச அதிபர் சாமிந்த ஹெட்டியாராச்சி ஆகியோர் இதில் கலந்து கொண்டு அரிசி பொதிகளை வழங்கினர்.

தலா 10 கிலோ கிராம் எடை கொண்ட அரிசிப் பொதிகள் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

அஸ்வெசும, சமுர்த்தி, முதியோர் கொடுப்பனவு, அங்கவீனமுற்றோர் கொடுப்பனவு, சிறு நீரக கொடுப்பனவு பெறும் பயனாளிகள் மற்றும் காத்திருப்பு பட்டியலில் இருந்து தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு இது வழங்கப்பட்டது.

கல்மெடியாவ தெற்கு கிராம சேவகர் பிரிவில் முதற் கட்டமாக 150 பயனாளிகளுக்கு இன்றைய தினம் வழங்கப்பட்டது.

மொத்தமாக 574 பயனாளிகள் இந்த அரிசிப் பொதிகளை பெற தகுதி பெற்றுள்ளனர். மொத்தமாக தம்பலகாமம் பிரதேச செயலக பிரிவில் 12 கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கிய வகையில் 7 ஆயிரத்து 104 குடும்பங்களுக்கு அரிசிப் பொதிகள் வழங்கப்படவுள்ளன.

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்காக அரசு வழங்கும் மற்றுமொரு விசேட சலுகையாக இது காணப்படுகிறது.

நிகழ்வில் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கபில நுவன் அதுகோரள, மாவட்ட அரச அதிபர் சாமிந்த ஹெட்டியாராச்சி, தம்பலகாமம் பிரதேச செயலாளர் திருமதி ஜெ.ஸ்ரீபதி, பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஐ.முஜீப் உட்பட பலர் கலந்து கொண்டனர்.





# ராமகிருஷ்ணர் திருக்கோவில் ஸம்ப்ரோக்ஷண விழா இன்று!

(வி.ரி.சகாதேவராஜா)

ராமகிருஷ்ண மிஷனின் காரைதீவு சாரதா நலன்புரி நிலையத்தில் புனரமைக்கப்பட்ட பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் திருக்கோவில் ஸம்ப்ரோக்ஷண விழா இன்று (21) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

ராமகிருஷ்ண மிஷன் மட்டக்களப்பு மாநில பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில், இலங்கை ராமகிருஷ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி அக்ஷராத்மாநந்தா ஜீ மகராஜ் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

அம்பாறை மட்டக்களப்பு மாவட்ட மிஷன் அபிமானிகள், பிரமுகர்கள், அறநெறி மாணவர்கள் இதில் கலந்து கொண்டனர். வேத மந்திரங்கள், மங்களாரதி, அங்கு திருப்பள்ளியெழுச்சி ,கோயில் வலம், கொடியேற்றம், பூஜை, பஜனை, ஹோமம் ,சிறப்பு ஆரதி, சொற்பொழிவு என்பன அதிகாலை முதல் இடம்பெற்றன.



# பக்கம் மாறி பயணிப்போரால் வீதி விபத்துக்கள் அதிகரிப்பு!

## நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

கல்முனை பிரதேசத்தின் பிரதான வீதிகளில் தமக்குரிய வலது, இடது பக்கங்களில் பயணிக்கலாம் பக்கம் மாறி பயணிப்பதால் அதிகமான வீதி விபத்துக்கள் இடம்பெற்று வருகின்றன என்றும் பலர் உபாதைக்கும் உள்ளாகி வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாகனங்களில் பயணிக்கும் போது தமக்குரிய பக்கங்களை கவனித்தே பயணிகளும் வாகன சாரதிகளும் செயற் பட வேண்டும்.

ஆனால் சைக்கிள், மோட்டார் சைக்கிள் , ஏனைய வாகனங்கள் மற்றும் பாதசாரிகள் பக்கம் மாறி பயணித்து வருவதால் எதிர்பாராதவிதமாக விபத்துக்கள் ஏற்படுகின்றன.

போக்குவரத்து பொலிஸார் இந்த விடயத்தில் கூடிய கவனம் செலுத்த வேண்டும் என்று பாதிக்கப்பட்டோர் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கூடுதலான விபத்துக்கள் குறுக்கு வீதிகள் பிரதான வீதியில் சந்திக்கும் இடங்களிலேயே இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# ஐ. நா. அபிவிருத்தி அதிகாரிகள் மட்டு.அரச அதிபருடன் சந்திப்பு!

**(பழுவூரான்)**

மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரனுக்கும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டத்தின் நிகழ்ச்சித் திட்ட ஆய்வாளர் முஹமட் முசைன் உள்ளிட்ட அதிகாரிகளுக்குமிடையிலான விசேட கலந்துரையாடல் மாவட்ட செயலகத்தில் இடம் பெற்றது.

இதன்போது மாவட்டத்தில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் செயற்றிட்டங்கள் தொடர்பாகவும் எதிர் காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள வேலைத்திட்டங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

அத்தோடு குளங்கள் புனரமைப்பு, சத்துணவு வழங்கல், இடர் காப்பு வேலைத்திட்டம், நவீன மயப்படுத்தப்பட்ட திட்டங்கள் தொடர்பாகவும் ஆராயப் பட்டது.

மேலும் செயற்றிட்டங்கள் மேற்கொள்ளும்போது எதிர் நோக்கும் சவால்கள் தொடர்பாக இங்கு அரச அதிபருக்குச் சுட்டிக்காட்டப்பட்டது.

இந்த நிகழ்வில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டப் பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் கே.பார்த்தீபன், மாவட்ட செயலக பிரதித் திட்டமிடல் பணிப்பாளர்களான ஆர். ஜதிஸ்குமார், வி.நவநீதன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



# நாட்டின் அடிப்படை உரிமைகளில் ஊழலுக்கு எதிரான வேலைத்திட்டம்!

## அவசியம் என்கிறார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ

நமது நாட்டில் ஊழலுக்கு எதிரான நடவடிக்கை இன்னும் பலவீனமான நிலையிலயே உள்ளது. புதிய சட்டம் இயற்றப்பட்டாலும், அது போதுமா என்பதில் சிக்கல் நிலவிவருகிறது. இந்த ஊழலுக்கு எதிரான செயல்முறை நாடாளுமன்ற சட்ட ஆணைகளால் உருவாக்கப்படாமல், நாட்டின் அரசியலமைப்பின் உயர் சட்டத்தால் ஆன ஒன்றாக அமைய வேண்டும்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

மருந்துப்பொருள் மோசடி உட்பட சுகாதாரத் துறையில் இடம்பெற்ற பல ஊழல் மோசடிகளை வெளிக்கொணர்ந்தமையால் பல மாதங்களாக தனது வேலையை இழந்து, மீண்டும் சேவைக்குத் திரும்பிய விசேட வைத்திய நிபுணர் சமல் சஞ்சீவ, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவைச் சந்தித்து, ஐக்கிய மக்கள் சக்தியின் ஊழலுக்கு எதிரான பயணத்தை வலுப்படுத்தும் முகமாக தனது ஆதரவை தெரிவித்து இணைந்து கொண்டார்.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

இலஞ்ச ஊழலுக்கு எதிரான செயற்பாடுகள் சுயாதீனமானதாகவும், வலுவானதாகவும் அமையும் வகையில் அதனை இலகுவில் மாற்ற முடியாத அத்தியாயமாக மாற்ற வேண்டும். நாடாளுமன்றத்தால் கொண்டு வரப்படும் சட்டம், பெரும்பான்மையால் மாற்றுவது சுலபம் என்பதால், ஊழல் எதிர்ப்புச் சட்டத்தை அரசியலமைப்பில் எளிதில் மாற்ற முடியாத சட்டமாக உருவாக்கி, அடிப்படை உரிமைகள் அத்தியாயத்தைப் போல வலுப்படுத்த வேண்டும்.

இவ்வாறு ஆக்கினால், ஜனாதிபதி யாலோ அல்லது நாடாளுமன்றத்தின் பெரும்பான்மையாலோ இதனை மாற்ற முடியாது போகும். இவ்வாறு பலமான ஏற்பாடாக மாற்றியமைப்பதே ஐக்கிய மக்கள் சக்தியின் நோக்கமாகும்.

நமது நாட்டின் அடிப்படை உரிமைகள் சிவில் மற்றும் அரசியல் உரிமைகளை அடிப்படையாகக் கொண்டே உருவாக்கப்பட்டுள்ளன. இந்த பரப்பு விரிவாகி, சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுடன் பொருளாதார, சமூக, கலாச்சார, மத, சுகாதாரம் மற்றும் கல்வி என்பன அடிப்படை உரிமைகளாக அமையும் வகையில் அர்த்தப்படுத்தப்பட வேண்டும்.

இது இவ்வாறு மாற்றப்படும் பட்சத்தில் ஊழல் மற்றும் தவறான செயல்கள் இடம்பெறாது. வெளிப்படைத் தன்மையுடன் பணிகள் மேற்கொள்ளப்படும்.

இவ்வாறாக, இந்தப் பகுதிகள் அடிப்படை உரிமைகளாக மாற்றப்படும்போது, இந்தப் பகுதிகள் தொடர்பாக ஆட்சியாளர்களும், உரிய அதிகாரிகளும் கடுமையான அழுத்தங்களுக்கு உள்ளாக நேரிடும். ஊழல் ஒழிப்பு நடவடிக்கைக்கு இது பலத்த உந்து சக்தியாக அமையும்.

சுகாதார அமைச்சருக்கு எதிராக நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்ட போது, 113 பேர் அதனை கண்டுகொள்ளாது ஊழலுக்கும் தவறான செயற்பாடுகளுக்கும் துணைபோனர். இந்த மோசடிகளுக்கு சுகாதார அமைச்சர் போலவே 113 பேரும் பொறுப்புக் கூற வேண்டும். இந்த ஊழல் கொள்கைகளை பாதுகாக்கக் கை தூக்கிய தரப்பினரை நாம் மறந்து விடோம். இன்று நாட்டில் மிகவும் ஊழல் நிறைந்த ஆட்சியே செயற்பட்டு வருகிறது.

வங்குரோத்து நாட்டில் ஊழலை ஒழிக்க வேண்டும் என்ற இலக்கை அடைய பல தியாகங்களைச் செய்து தேவையற்ற அழுத்தங்களுக்கு மத்தியிலும், தனது பணியை பணயம் வைத்தும், ஊழலுக்கு எதிரான முன்னெடுப்புகளில் கலாநிதி சமல் சஞ்சீவ பெரும் பங்காற்றினார். சிவில் பிரஜை என்ற வகையில் அவரது ஊழலுக்கு எதிரான பிரச்சாரத்தை தடையின்றி செயல்படுத்த ஐக்கிய மக்கள் சக்தி கரம் கொடுக்கும்.

ஊழல்கள் இடம்பெறும் நிறுவனங்கள் மற்றும் இடங்கள் குறித்து அறிந்து நடவடிக்கை எடுப்பதற்கு முறையான பொறி முறையின் தேவை இருப்பதால், நாட்டின் அபிவிருத்தியை இலக்காக் கொண்டு ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் ஊழலுக்கு எதிரான திட்டத்துக்கு சட்டரீதியான அதிகாரம் வழங்கப்படும்.– என்றார்.

# உணவு கையாளுவோருக்கு தடுப்பூசி வழங்கும் நிகழ்வு

(எம்.எம்.றம்ஸீன்)



உணவு கையாளுவோருக்கான ஆலோசனை கருத்தரங்கும் தடுப்பூசி வழங்கும் நிகழ்வு மற்றும் மருத்துவ பரிசோதனை செய்து சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் இடம்பெற்றது.

காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் தஸ்லீமா பஷீர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர், பொது சுகாதார பரிசோதர்கள் மற்றும் உணவு கையாளுபவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



# கத்தரிக்கன்றுகள் வழங்கல்

(ஹஸ்பர் ஏ.எச் )

நிலைபேறான வீட்டுத் தோட்ட திட்டத்தின் கீழ் திருகோணமலை – நிலாவெளி கமநல சேவை நிலையத்துக்கு உட்பட்ட வீட்டுத் தோட்ட பயனாளிகளுக்கு கத்தரிக் கன்றுகள் வழங்கப்பட்டது.



# நிலைபேறான வீட்டுத் தோட்ட திட்டத்தில் விதைகள் மற்றும் நாற்றுக்கள் வழங்கல்

(மன்னார்)

நானாட்டான் கமநல சேவைகள் நிலையத்தின் ஏற்பாட்டில் 'நிலைபேறான வீட்டுத்தோட்டம்' நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் விதைகள் மற்றும் நாற்றுக்கள் வழங்கும் நிகழ்வு நானாட்டான் பிரதேசச் செயலக மண்டபத்தில் இடம் பெற்றது.

நானாட்டான் பிரதேச செயலாளர் சிவசம்பு கனகாம்பிகை தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் மன்னார் மாவட்ட அரச அதிபர் க.கனகேஸ்வரன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு விதைகள் மற்றும் நாற்றுக்களை வழங்கினார்.

நிகழ்வில் கமநல அபிவிருத்தி திணைக்கள அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

# பவளக்கொடி கரகாட்டம் நாளை அரங்கேற்றம்!

(பழுவூரான்)

முனைக்காடு நாகசக்தி கலை மன்றம் நடத்தும் பவளக்கொடி கரகாட்டம் நாளை திங்கட்கிழமை முனைக்காடு நாகலிங்கேஸ்வரர் ஆலய முன்றலில் இரவு 7 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்த அரங்கேற்றப் பெருவிழாவில் கலைச்சுடர் மு.நமசிவாயம் கொப்பி ஆசிரியராகவும், ந.சிவாரெத்தினம் அண்ணாவியாராகவும், பிற்பாடல் மற்றும் களரி முகாமையாளர்களாக பா.பாஸ்கரன், ந.அரசம்மா ஆகியோர் செயற்படவுள்ளனர்.

இதன்போது ஆசியுரையை முனைக்காடு நாகலிங்கேஸ்வரர் ஆலயப் பிரதமகுரு சிவஸ்ரீ ப.மானகப் போடி ஐயா நிகழ்த்தவுள்ளார்.




# கல்முனை சுகாதாரப் பணிமனையில் உணவுப் பாதுகாப்பு மீளாய்வு கூட்டம்

(அஸ்ஹர் இப்றாஹிம், நூருல் ஹுதா உமர் )

உணவு பாதுகாப்பு தொடர்பான வருடாந்த மாவட்ட மீளாய்வுக் கூட்டம் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் இடம்பெற்றது.

கல்முனை பிராந்திய சுற்றுச்சூழல் தொழில்சார் மற்றும் உணவுப் பாதுகாப்பு பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.எஸ்.எம்.பௌசாத்தால் ஒருங்கிணைப்புச் செய்யப்பட்ட இந்த நிகழ்வு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் சுகாதார அமைச்சின் உணவுக் கட்டுப்பாடு நிர்வாகப் பிரிவுக்கான சமுதாய மருத்துவ நிபுணர் டாக்டர் பானுஜ, உணவுக் கட்டுப்பாடு நிர்வாகப் பிரிவுக்கான சிரேஷ்ட உணவு மற்றும் மருந்து பரிசோதகர் ஜவாத் மரைக்கார் ஆகியோரின் பங்கேற்புடன் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கல்முனை பிராந்தியத்தில் உள்ள சுகாதார வைத்திய அதிகாரிகள், மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது கல்முனை பிராந்தியத்தில் உள்ள சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளின் உணவு பாதுகாப்பு மற்றும் உணவகங்கள் பதிவு செய்தல் தொடர்பாக விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட சுகாதார வைத்திய அதிகாரிகளால் காத்திரமான விளக்கக் காட்சியுடன் கூடிய பிரேரணைகள் சமர்ப்பிக்கப்பட்டன.




# திருகோணமலை மாவட்ட எம்.பி. காஸா சிறுவர் நிதியத்துக்கு உதவி

(அஸ்ஹர் இப்றாஹிம்)

காஸா சிறுவர் நிதியத்துக்குத் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ் தௌபீக் தனது சொந்த நிதியிலிருந்து நிதி உதவிகளை வழங்கியுள்ளார்.

அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா சபையின் கிண்ணியா கிளையின் ஊடாக இடம்பெற்றுவரும் நிதி சேகரிப்பு குழுவினரை சந்தித்து நிதி உதவிகளை வழங்கி வைத்தமை குறிப்பிடத்தக்கது.

# 'பக்தி இசைப்பஞ்சகம்' இறுவட்டு வெளியீடு!

(த.சுபேசன்)

சமய மற்றும் சமூக சேவையாளர் அன்னை செல்வி ஜெகதீஸ்வரி நாகலிங்கம் அம்மையாரின் 80 ஆவது அக வையை முன்னிட்ட அமுதவிழா மதிப்பளிப்பு நிகழ்வும் 'பக்தி இசைப் பஞ்சகம்' இறுவட்டு வெளியீட்டு நிகழ்வும் உடுவில் இந்து இளைஞர் மன்ற பாடசாலையில் அண்மையில் இடம் பெற்றன.



சாவகச்சேரிப் பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் வை.ஜெகதாஸ் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வுகளில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண பல் கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் ஸ்ரீ சற்குணராசாவும், சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண நீர்ப்பாசனத் திணைக்கள சிரேஷ்ட நீர்ப்பாசன பொறியியலாளர் எந்திரி ச.சர்வராஜா மற்றும் இலங்கை முதலுதவிச்சங்க இந்து சமயத் தொண்டர்சபையின் தேசிய ஆணையாளர் வை.மோகனதாஸ் ஆகியோரும் கலந்து கொண்டனர்.




# தேசிய மட்டத்தில் சாதனை படைத்த அறநெறி மாணவர்கள் கௌரவிப்பு

(த.சுபேசன்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில், இந்து சமய அறநெறிப் பாடசாலை மாண வர்கள் மத்தியில் அண்மையில் கொழும்பு இராமகிருஷ்ண மிஷனில் நடத்தப்பட்ட தேசிய ஆக்கத்திறன் போட் டியில் சாவகச்சேரி பழநி அறநெறிப் பாடசாலை மாணவர்கள் மூவர் தேசிய மட்டத்தில் வெற்றியீட்டி சாதனை படைத்துள்ளனர்.

இந்த நிலையில் பழநி அறநெறிப் பாடசாலை நிர்வாகத்தினர் அந்த மாணவர்களைக் கௌரவித்திருந்தனர்.

பழநி அறநெறிப் பாடசாலை மாண வன் கே.அருள்பிரியன் கதாபிரசங்கப் போட்டியில் தேசிய மட்டத்தில் முதலா மிடத்தை பெற்றுள்ளார்.

எம்.மதுசன் எழுத்தாற்றல் போட்டியில் தேசிய மட்டத்தில் இரண்டாம் இடத்தை யும், ரீ.சம்சிகா எழுத்தாற்றல் போட்டியில் தேசிய மட்டத்தில் மூன்றாம் இடத்தையும் பெற்று சாதனை படைத்துள்ளனர்.

இந்த நிலையில் கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது.

கௌரவிப்பு நிகழ்வில் பழநி அற நெறிப் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பழநி அறநெறி நிர்வா கத்தினர், ஊர் மக்கள் கலந்து கொண் டனர்.




# சித்திரை புத்தாண்டு விளையாட்டு; மரதன் ஓட்டம் நேற்று காரைதீவில்!

(வி.ரி.சகாதேவராஜா)

குரோதி சித்திரை வருடப்பிறப்பை முன்னிட்டும் காரைதீவு விளையாட்டுக் கழகத்தின் 41 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டும், காரைதீவு விளையாட்டுக் கழகமும் விபுலாநந்தா சனசமூக நிலையமும் இணைந்து நடத்திய 26 ஆவது மாபெரும் கலாசார விளையாட்டு விழாவின் காலை நிகழ்ச் சிகள் கழகத் தலைவர் வி.விஜயசாந்தன் தலைமையில் நேற்று (20) சனிக்கிழமை காலை மரதன் ஓட்டத்துடன் ஆரம்ப மாகியது.

காலை நிகழ்வான மரதன் ஓட்டம்



கண்ணகி அம்மன் ஆலய முன்றலில் ஆரம்பிக்கப்பட்டு காரைதீவு விளை யாட்டு கழக அலுவலகத்தில் நிறைவு பெற்றது.

கழக போசகர்களான சிவ.ஜெகரா ஜன், வே.இராஜேந்திரன், வே.த.சகா தேவராஜா உள்ளிட்ட அதிதிகள் கலந்து கொண்டனர்.

நான்கு கிலோ மீற்றர் நீள மரதன் ஓட்டத்தில் ஏழு போட்டியாளர்கள் பங் கேற்றனர்.

காரைதீவு பொலிஸார் மற்றும் காரைதீவு பிரதேச வைத்தியசாலையினர் ஆகியோர் ஆதரவளித்தனர்.

கழக உறுப்பினர்கள் மோட்டார் சைக்கிளில் பாதுகாப்பளித்தனர்.

பெருந்திரளான மக்கள் வீதியோ ரத்தில் நின்று போட்டியாளர்களுக்கு உற்சாகப்படுத்தினர்.



# சைக்கிள் ஓட்டத்தை ஆரம்பித்து வைத்தார் சாணகியன் எம்.பி.

களுவாஞ்சிகுடி இளைஞர் முன்னேற்றக் விளையாட்டுக் கழகத்தின் 42 ஆவது வருடாந்த விளையாட்டு விழாவின் முதல் நாள் நிகழ்வாக நேற்று (20) சி.மூ. இராசமாணிக்கம் மக்கள் அமைப்பின் அனுசரணையில் சைக்கிள் ஓட்டம் நடைபெற்றது.

இந்த நிகழ்வு சி.மூ.இராசமாணிக்கம் சிலையடியில் நாடாளுமன்ற உறுப்பினரும், சி.மூ.இராசமாணிக்கம் மக்கள் அமைப்பின் தவிசாளருமான இரா.சாணக்கியனால் சைக்கிள் ஓட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

நிகழ்விற்கு ஒவ்வொரு வருடமும் சி.மூ.இராசமாணிக்கம் மக்கள் அமைப்பு அனுசரணை வழங்கிக் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.



# குடும்ப நல மருத்துவ மாதுக்களுக்கு புற்றுநோய் தொடர்பான விழிப்புணர்வு!

(பழுவூரான்)

இலங்கை புற்றுநோய் சங்கத்தின் மட்டக்களப்புக் கிளையின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு பிராந்திய சுகாதார பிரிவு குடும்ப நல மருத்துவ மாதுக்களுக்கான புற்றுநோய் தொடர்பான விழிப்புணர்வுச் செயலமர்வு மட்டக்களப்பு பிராந்திய சுகாதார அலுவலக பணிமனை கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை (19) இடம்பெற்றது.

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார அலுவலக பணிமனை அனுசரணையில் இலங்கை புற்றுநோய் சங்கத்தின் மட்டக்களப்பு கிளையின் நிறைவேற்றுக்குழு உறுப்பினரும் மகப்பேற்று வைத்திய நிபுணருமான பேராசிரியர் எஸ். கருணாகரன் தலைமையில் இடம்பெற்ற சுகாதார பிரிவு குடும்ப நல மருத்துவ மாதுக்களுக்கான புற்றுநோய் தொடர்பான விழிப்புணர்வு செயலமர்வில், இந்திய புற்றுநோய் சங்கத்தின் சுவஸ்தா கென்சர் கெயார் நிறுவனத்தின் பிரதம செயலாளர் வாசுதேவ சதுர்வேதி வளவாளராகக் கலந்து கொண்டார்.

மட்டக்களப்பு பிராந்திய சுகாதாரப் பிரிவில் குடும்ப நல மருத்துவ மாதுக்களாக, கிராம மட்டத்தில் பணியாற்றும் குடும்ப நல மருத்துவ மாதுக்களுக்கு இந்தச் செயலமர்வு நடத்தப்பட்டது. இலங்கை புற்றுநோய் சங்கத்தின் மட்டக்களப்புக் கிளை உறுப்பினர்களும் இதில் கலந்து கொண்டனர்.

# சனாதன தர்மம் தொடர்பில் பேசிய உதயநிதியை தண்டிக்க வேண்டும்

## தெலுங்கானா முதல்வர் கருத்து




சனாதன தர்மத்தை ஒழிக்க வேண்டும் என பேசியதற்காக தமிழக அமைச்சர் உதயநிதி ஸ்டாலினை தண்டிக்க வேண்டும் என தெலுங்கானா மாநில முதல்வர் ரேவந்த் ரெட்டி தெரிவித்துள்ளார்.

தெலுங்கானாவில் தொடர்ந்து 10 ஆண்டுகளாக ஆட்சி பீடத்தில் இருந்த பாரத் ராஷ்டிர சமிதி கட்சியை வீழ்த்தி காங்கிரஸ் கட்சியை ஆட்சியில் அமர வைத்தவர் ரேவந்த் ரெட்டி. சட்டப் பேரவைத் தேர்தலின்போது தனது தொகுதி மட்டுமல்லாது மாநிலத்தில் உள்ள அனைத்து தொகுதிகளிலும் 24 மணி நேரமும் சூறாவளி பிரச்சாரம் செய்து, காங்கிரஸை தனிப்பெரும்பான்மையுடன் வெற்றி பெற அவர் காரணமாக அமைந்தார். அதனால், பல மூத்த காங்கிரஸ் நிர்வாகிகள் இருந்தும், ரேவந்த் ரெட்டிக்கு, காங்கிரஸ் மேலிடம் முதல்வர் பதவி கொடுத்தது. இதனால், ரேவந்த் ரெட்டிக்கு மக்கள் மத்தியில் செல்வாக்கு அதிகரித்துள்ளது.

எதிர்வரும் மே 13 ஆம் திகதி தெலுங்கானாவில் உள்ள 17 மக்களவை தொகுதிகளுக்கும் ஒரே கட்டமாக வாக்குப்பதிவு நடைபெற உள்ளது.

இதற்காக சமீபத்தில் 'டைம்ஸ் நவ் குரூப்' சார்பில் நடத்தப்பட்ட நிகழ்ச்சி ஒன்றில் முதல்வர் ரேவந்த் ரெட்டி கலந்து கொண்டு பேசியபோது அவர் தெரிவித்த கருத்து விவாதத்தை கிளப்பி உள்ளது.

இந்த நிகழ்ச்சியின்போது, சனாதன தர்மத்தை ஒழிக்க வேண்டும் என சமீபத்தில் தமிழக அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கூறிய கருத்து குறித்து கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்கு ரேவந்த் ரெட்டி பதிலளித்த போது,

"உதயநிதி ஸ்டாலினின் கருத்து தவறானது.அது அவரின் தனிப்பட்ட சிந்தனை. சனாதன தர்மம் குறித்த கருத்துக்காக நிச்சயம் அவர் தண்டிக்கப்பட வேண்டும். இக்கருத்தை 'இண்டியா' கூட்டணி கட்சியினர் ஏற்றுக் கொள்ளவில்லை" – என்றார்.

சனாதன தர்மத்தை ஒழிக்க வேண்டும் என்ற உதயநிதியின் கருத்துக்கு மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி ஏற்கெனவே எதிர்ப்பு தெரிவித்திருந்த நிலையில், தற்போது தெலுங்கானா முதல்வர் ரேவந்த் ரெட்டியும் எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.

தெலுங்கானாவில் மக்களவைத் தேர்தல் நெருங்கும் நிலையில், ரேவந்த் ரெட்டியின் இந்த கருத்து முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

இந்த விவகாரம் தொடர்பாக அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மீது பல்வேறு நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் நிலுவையில் உள்ளன. பல்வேறு பொலிஸ் நிலையங்களிலும் வழக்குகள் பதிவாகி உள்ளன.

பா.ஜ.க. உட்பட பல்வேறு இந்து அமைப்பினர் உதயநிதியின் கருத்துக்கு கடும் ஆட்சேபங்களை தெரிவித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# பினராயி விஜயன் பா.ஜ.கவுடன் சமரசம்: பிரியங்கா காந்தி குற்றஞ்சாட்டுகின்றார்




கேரளாவின் 20 தொகுதிகளிலும் ஒரே கட்டமாக வரும் 26 ஆம் திகதி வாக்குப் பதிவு நடைபெற உள்ளது.

இந்த நிலையில் கேரளத்தின் பத்தனம்திட்டா தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளரை ஆதரித்து கட்சியின் பொதுச் செயலாளர் பிரியங்கா காந்தி நேற்று உரையாற்றுகையில்,

"லைப் மிஷன் வழக்கு, தங்கக் கடத்தல் வழக்கு உள்ளிட்ட பல ஊழல் வழக்குகளில் முதல்வர் பினராயி விஜயனின் பெயர் அடிபடுகிறது. ஆனால் அவருக்கு எதிரான எந்தவொரு வழக்கையும் மத்திய பா.ஜ.க. அரசு எடுக்கவில்லை. சோதனை உள்ளிட்ட எந்த ஒருநடவடிக்கையும் எடுக்கவில்லை.

கால்பந்து விளையாட்டில் சமரசம் செய்துகொண்ட வீரரை வைத்துக் கொண்டு நீங்கள் வெற்றிபெற முடியாது. அதுபோலவே சமரசம் செய்து கொண்ட ஒருமுதல்வரை நீங்கள் வைத்திருக்கிறீர்கள். எனது சகோதரர் ராகுல்காந்தி மற்றும் காங்கிரஸ் கட்சியைமட்டுமே அவர் விமர்சிக்கிறார். பா.ஜ.கவை விமர்சிப்பதில்லை."– என்றார்.

# கேரளாவில் பறவைக் காய்ச்சல் பரவல் கோவையில் தீவிர கண்காணிப்பு




கேரளாவில் பறவைக் காய்ச்சல் பாதிப்பு பரவுவதையடுத்து, தமிழக -கேரள எல்லையான வாளையார் உள்ளிட்ட 12 சோதனைச்சாவடிகளில் கால்நடைப் பராமரிப்புத்துறை சார்பில் கண்காணிப்பு பணிகள் தீவிரப் படுத்தப்பட்டுள்ளன.

கேரள மாநிலம் ஆலப்புழாவில் உள்ள பண்ணைகளில் வாத்து, கோழி உள்ளிட்ட பறவைகள் தொற்று நோய் பாதிப்புக்கு உள்ளாகி இறக்கின்றன என தகவல்கள் வெளியாகியுள்ளன.

எனவே, ஹெச் 5 என்1' எனப்படும் பறவைக்காய்ச்சல் தமிழகத்திலும் பரவக்கூடும் என அஞ்சப்படுகிறது.

இதையடுத்து, கேரள மாநிலத்தில் பறவைக் காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கேரளாவில் பறவைக் காய்ச்சல் பரவியுள்ளதால், கோவை மாவட்டத்தில் தமிழக-கேரள எல்லைப் பகுதிகளான ஆனைகட்டி, வாளையார், வேலந்தாவளம், மேல்பாவி, முள்ளி, மீனாட்சிபுரம், கோபாலபுரம், செம்மனாம்பதி, வீரப்பகவுண்டன் புதூர், நடுப்புணி, ஜமீன்காளியாபுரம், வடக்காடு உள்பட 12 சோதனைச் சாவடிகளில், சிறப்பு கால்நடைப் பராமரிப்புக் குழுவினர் 24 மணி நேரமும் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

# தமிழகத்தில் இண்டியா கூட்டணியை முதல்வர் சிறப்பாக ஒருங்கிணைத்தார்

## செல்வப்பெருந்தகை பெருமிதம்



தமிழகத்தில் 'இண்டியா' கூட்டணியை ஒருங்கிணைத்து முதல்வர் மு.க.ஸ்டாலின் சிறப்பாக செயல்பட்டார் என தமிழக காங்கிரஸ் தலைவர் கு.செல்வப்பெருந்தகை தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில்,

"இந்தியாவின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் மக்களவைத் தேர்தலின் முதல்கட்டம் தமிழகத்தில்அமைதியாக 70 சதவீத வாக்குப்பதிவுடன் நடந்து முடிந்திருக்கிறது. ஜனநாயகத்துக்கும், சர்வாதிகாரத்துக்கும் இடையே நடைபெற்றதேர்தலில் தமிழக மக்கள் பெருவாரியாக 'இண்டியா' கூட்டணியை ஆதரிக்கும் வகையில் வாக்களித்திருக்கிறார்கள் என்ற உறுதியான செய்தி மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது.

தமிழகத்தில் தி.மு.க. தலைமையிலான 'இண்டியா' கூட்டணியை மிகச் சிறப்பாக ஒருங்கிணைத்து செயல்பட்ட பெருமை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு உண்டு. தமிழகத்தின் உரிமைகளையும், நலன்களையும் கடந்த 10 ஆண்டுகளாக பறித்துவந்த பா.ஜ.க. ஆட்சிக்கு உரிய பாடத்தை புகட்டும் வகையில் முதல்வர் மேற்கொண்ட கடுமையான பரப்புரையால் 'நாற்பதும் நமதே, நாளை நமதே, நாடும் நமதே' என்னும் நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

40 தொகுதிகளிலும் அவரே வேட்பாளராக நிற்பதாகக் கருதி, வெற்றி வாய்ப்புக்கான அனைத்து முயற்சிகளையும் கூட்டணி கட்சித் தலைவர்களோடு பகிர்ந்து கொண்டது மிகுந்த மகிழ்ச்சிக்கும், பாராட்டுக்கும் உரியது.

அதேபோல காங்கிரஸ் மூத்ததலைவர் ராகுல்காந்தி பரப்புரையில், முதல்வர் மு.க.ஸ்டாலின் பங்கேற்று இருவரும் ஆற்றிய உரைகள் தமிழக மக்களிடையே பெரும் மாற்றத்தையும், எழுச்சியையும் ஏற்படுத்தியிருப்பதும் குறிப்பிடத்தக்கது. அகில இந்திய காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கேவின் தமிழக பரப்புரையும் மிகுந்த பயனுள்ளதாக இருந்தது.

அந்தவகையில், கூட்டணி கட்சிகளிடையே நல்லிணக்கத்தையும், ஆரோக்கியமான செயல்பாடுகளையும் உருவாக்கி, வகுப்புவாத சக்திகளை வீழ்த்துவதில் மிகப்பெரிய வெற்றியைப் பெறும் நிலை இன்றைக்கு ஏற்பட்டுள்ளது. இதற்காக 'இண்டியா' கூட்டணியின் தமிழகத் தலைவர் மு.க.ஸ்டாலினுக்கும், கூட்டணி கட்சித் தலைவர்களுக்கும், வாக்குசேகரிப்பில் தீவிரமாக ஈடுபட்ட தொண்டர்களுக்கும் நன்றி, வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்." – என்று குறிப்பிட்டுள்ளார்.



# இஸ்ரேலின் தாக்குதலுக்கு பதில் தாக்குதல் இல்லை



இஸ்ரேலின் தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கப்போவதில்லை என ஈரான் அறிவித்துள்ளது.

## ஈரான் அறிவிப்பு

அண்மைக்காலமாக இஸ்ரேல் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள் தமது நாட்டின் இராணுவ பலத்தை வெளிப்படுத்தும் நோக்கத்தில் மாத்திரமே இடம்பெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் ஈரான் மீது இஸ்ரேல் ஏவுகணை தாக்குதல் நடத்தியதாகவும், இந்த தாக்குதல் ஈரானின் மத்திய மாகாணத்தில் உள்ள இஸ்பஹான் பகுதியில் இடம்பெற்றதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், இஸ்ரேலுக்கு சொந்தமான 3 ஆளில்லா விமானங்கள் தங்கள் படைகளால் சுட்டு வீழ்த்தப்பட்டன எனவும் வேறு எந்த தாக்குதலும் தங்கள் நாட்டின் மீது நடத்தப்படவில்லை என்றும் ஈரான் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த முதலாம் திகதி சிரியாவில் உள்ள தனது தூதரகம் மீது இஸ்ரேல் நடத்திய வான்வழி தாக்குதலில் 13 பேர் கொல்லப்பட்டதற்கு கொடுக்கும் வகையில் ஈரான் சமீபத்தில் இஸ்ரேல் மீது 300 இற்கும் மேற்பட்ட தாக்குதல்களை மேற்கொண்டிருந்தது.



# மாலைதீவில் நாடாளுமன்ற தேர்தல்: வாக்குப்பதிவுகள் ஆரம்பமாகின

மாலைதீவின் 20 ஆவது நாடாளுமன்றத்திற்கு உறுப்பினர்களை தேர்ந்தெடுக்க இன்று தேர்தல் நடைபெறுகிறது.

இந்த தேர்தலானது மார்ச் 17 ஆம் திகதி நடத்த முதலில் முடிவு செய்யப்பட்டு அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் அதன் பின்னர் தேர்தல் திகதி மாற்றம் செய்யப்பட்டது.

தேர்தலை ஒத்திவைப்பது தொடர்பாக நாடாளுமன்றத்தில் பெப்ரவரி 28 ஆம் திகதி மசோதா நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்த மசோதாவுக்கு ஜனாதிபதி முகமது முய்சு ஒப்புதல் அளித்த பின்னர் தேர்தல் திகதி ஏப்ரல் மாதத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

அதன்படி இன்று காலையில் வாக்குப்பதிவு தொடங்கி நடைபெறுவதுடன் 93 தொகுதிகளுக்கும் ஒரே கட்டமாக வாக்குப்பதிவு நடத்தப்படுகிறது.

முகமது முய்சுவின் செயல்பாடுகளால் அண்டை நாடான இந்தியாவுடனான உறவில் விரிசல் ஏற்பட்டுள்ள நிலையில் இந்த தேர்தல் அவரது செல்வாக்கை நிரூபிப்பதற்கான முக்கிய சோதனையாக பார்க்கப்படுகிறது.

கடந்த ஆண்டு நடந்த ஜனாதிபதி தேர்தலில் முகமது முய்சு இந்திய இராணுவத்தை வெளியேற்றுவோம் என்ற முழக்கத்துடன் வெற்றி பெற்றார்.

சீனாவின் ஆதரவாளராக அறியப்படும் முகமது முய்சு இந்தியாவை வெளியேற்றுவோம் என்ற பிரச்சாரத்தைத் தொடங்கியதிலிருந்து மாலைதீவு புவிசார் அரசியல் முக்கிய புள்ளியாக மாறியுள்ளது.

# ஜப்பானிய கடற்படைக்கு சொந்தமான ஹெலிகொப்டர்கள் கடலில் விழுந்தன

பசிபிக் பெருங்கடலில் இரவு நேர பயிற்சியில் ஈடுபட்டிருந்த ஜப்பானிய கடற்படையின் இரண்டு ஹெலிகொப்டர்கள் விபத்துக்குள்ளானதில் ஜப்பானிய கடற்படை வீரர் ஒருவர் உயிரிழந்தார். ஏழு பேரை காணவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

ஜப்பான் நாட்டையே உலுக்கி இருக்கும் இந்த ஹெலிகொப்டர் விபத்து நேற்று நள்ளிரவு நடந்துள்ளதாக அந்த நாட்டின் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

டோக்கியோவிற்கு தெற்கே 600 கிலோமீற்றர் தொலைவில் உள்ள இசு தீவுகளுக்கு அருகே இரட்டை என்ஜின் மிட்சுபிஷி எஸ்.எச்.-60 கே கள் நீர்மூழ்கி எதிர்ப்பு பயிற்சியில் ஈடுபட்டிருந்தன என அதிகாரிகள் தெரிவித்தனர்.

விபத்துக்கான காரணம் தெரியவில்லை என பாதுகாப்பு அமைச்சர் மினோரு கிஹாரா தெரிவித்துள்ளார்.

"முதலில் உயிர்களைக் காப்பாற்ற நாங்கள் எங்களால் முடிந்த அனைத்தையும் செய்கிறோம்," என்று கிஹாரா கூறினார்.

ஹெலிகொப்டர்கள் "இரவில் நீர்மூழ்கிக் கப்பல்களை எதிர்ப்பதற்கான பயிற்சிகளைச் செய்கின்றன" என்று கூறினார்.






# டயலொக்கும் ஆசி ஆட்டா குழுமமும் பார்த்தி எயார்டெலும் ஒப்பந்தங்கள்

Dialog airtel axiata

2024 ஏப்ரல் 18 – டயலொக் ஆசிஆட்டா பி.எல்.சி, ஆசிஆட்டா குழுமம் பெர்ஹாட் மற்றும் பார்த்தி எயார்டெல் லிமிடட் ஆகியன பார்த்தி எயார்டெல் லங்கா (பிரைவேட்) லிமிடட்டின் வெளியிடப்பட்ட பங்குகளை முழுமையாக கையகப்படுத்துதல் குறித்த வரையறுக்கப்பட்ட ஒப்பந்தத்திற்கு இணங்குகின்றன.

இந்த உடன்படிக்கையின் கீழ் எயார்டெல் லங்காவின் வெளியிடப்பட்ட பங்குகளில் 100 வீதத்தை டயலொக் கையகப்படுத்தும் அதேவேளை டயலொக்கின் மொத்த வெளியிடப்பட்ட 10.355 வீதம் மதிப்பிலான சாதாரண வாக்குரிமை பங்குகளை பங்குமாற்று முறை மூலம் பார்த்தி எயார்டெலுக்கு டயலொக் வழங்கும்.

இந்த பரிவர்த்தனை டயலொக் பங்குதாரர்களின் ஒப்புதலுக்கு உட்பட்டது மற்றும் பங்கு விற்பனை ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள குறிப்பிட்ட நிபந்தனைகளை பூர்த்தி செய்யும் வரை நிலுவையில் உள்ளது, இதில் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையின் அனுமதி மற்றும் பொருந்தக்கூடிய பிற சட்ட, கூட்டாண்மை மற்றும் ஒழுங்குமுறை இணக்க நடைமுறைகள் ஆகியவை அடங்கும்.

இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணைக்குழு முன்மொழியப்பட்ட இவ்வொன்றிணைவுக்கு அதன் அனுமதியை வழங்கியுள்ளது. இது இலங்கை முழுவதும் தொலைத்தொடர்பு சேவைகளை ஏற்றுக்கொள்வதற்கான அதன் தொலைநோக்கை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

இந்த ஒன்றிணைவு, இணைக்கப்பட்ட நிறுவனத்தை பாரிய அளவிலான பொருளாதாரங்களைத் திரட்டவும், உட்கட்டமைப்பில் நகலெடுப்புகளை குறைப்பதற்கும், தொழில்நுட்பம் மற்றும் மூலதனச் செலவினங்களில் ஒருங்கிணைவை அடைவதற்கும், மேம்படுத்தப்பட்ட அதிவேக டீசழயனடியனெ இணைப்பு, குரல் மற்றும் பெறுமதி சேர் சேவைகள், செலவு சேமிப்பு மற்றும் தொழிற்பாட்டு வினைத்திறன் ஆகிய வற்றுக்கு வழிவகுக்கும்.

ஆசிஆட்டா குழுமம் பெர்ஹாட்டின் முகாமைத்துவப் பணிப்பாளர் மற்றும் குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான விவேக் சூட் கருத்து தெரிவிக்கையில்,

“டயலொக் மற்றும் எயார்டெல் லங்காவுக்கு இடையிலான இந்த ஒன்றிணைவு ஆசிஆட்டாவின் சந்தை இணைப்பு மற்றும் மீண்டெழுந்தன்மைக்காக வகுக்கப்பட்ட மூலோபாயத்தின் வழி சீரமைக்கப்பட்டுள்ளது.

இந்த ஒன்றிணைவு ஆசிஆட்டாவின் பங்குதரர்களுக்கு மதிப்புகளை உருவாக்கும். மேலும் இவ்விரு நிறுவனங்களும் ஒன்றிணைவதை நாம் எதிர்நோக்கியுள்ளோம். எயார்டெல் லங்கா மற்றும் அதன் ஊழியர்கள் மீது நாம் மிகுந்த மரியாதை வைத்துள்ளோம். அவர்களுடன் சேர்ந்து இலங்கை மக்கள், வனிகங்கள், மற்றும் பொதுத் துறைக்காக பணியாற்ற ஆவலாக உள்ளோம்.” – என்றார்.

ஆசிஆட்டா குழுமம் பெர்ஹாட், தொலைத்தொடர்பு வணிகத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் குழும நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி ஹான்ஸ் விஜயசூரிய இது குறித்து தெரிவிக்கையில்,

“இலங்கையின் தொலைத்தொடர்பு துறையில் முன்னிலை வகிக்கும் இரு தொலைத்தொடர்பு குழுமங்களினது இந்த ஒன்றிணைவு, இலங்கை தொலைத்தொடர்பு துறையின் வளர்ச்சிக்கும் பேண்தகுநிலைக்கும் நன்மை பயக்கும் வகையில் அவற்றை ஒன்று சேர்க்கிறது. இலங்கையின் நுகர்வோருக்கும் நிறுவனங்களுக்கும் நாம் அளிக்கும் வாடிக்கையாளர் அனுபவம் மற்றும் புத்தாக்கத்தில் புதிய எல்லைகளை அடைய எதிர்பார்த்துள்ளோம்” – என்றார்.






# BAIC X55 II SUV வாகனங்களுக்கான முன்பதிவுகளை ஆரம்பித்துள்ள டேவிட் பீரிஸ் ஓட்டோமொபைல்ஸ்

இலங்கையில் புத்தம் புதிய BAIC X55 II SUV வாகனங்களுக்கான முன்பதிவுகளைப் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கைகளை டேவிட் பீரிஸ் ஓட்டோமொபைல்ஸ் (பிரைவட்) லிமிடட் நிறுவனம் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்துள்ளது.

எளிமையான முறையில் நடைபெற்ற நிகழ்வில் 15 வாடிக்கையாளர்கள் தமது புத்தம் புதிய வாகனங்களுக்குரிய முற்பதிவுக்கான வைப்புக்களை மேற்கொண்டதுடன், டேவிட் பீரிஸ் ஓட்டோமொபைல்ஸ் நிறுவனத்துக்கும் அதன் வாடிக்கையாளர்களுக்கும் ஒரு அற்புதமான பயணத்தின் ஆரம்பத்தைக் குறிக்கும் வகையில் இந்நிகழ்வு அமைந்தது.

இலங்கையின் வாகன ஓட்டுநனர்களுக்கு உறுதியளிக்கும் புதிய புத்தாக்க சகாப்தம், தரமான தயாரிப்பு மற்றும் இணையற்ற வாடிக்கையாளர் சேவைகளை வழங்கும் வகையில் பீஜிங் ஓட்டோமோட்டிவ் இன்டஸ்ரி ஹோல்டிங்ஸ் கம்பனி லிமிடட் நிறுவனத்துடன் மூலோபாய கூட்டாண்மையை ஏற்படுத்தியிருப்பதாக டேவிட் பீரிஸ் ஓட்டோமொபைல்ஸ் நிறுவனம் அண்மையில் அறிவித்திருந்தது.

வாகன உற்பத்தி, ஒருங்குசேர்த்தல் தொழில்துறை மற்றும் வாகன உதிரிப்பாக உற்பத்தித் தொழில்துறைக்கு கைத்தொழில் அமைச்சினால் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட நிலையான செயற்பாட்டு நடைமுறையின் கீழ் உள்நாட்டில் பெறுமதி சேர்த்தல் திட்டத்திற்கு அமைய வருங்காலத்துக்கான வாகன மொடல்களை இறக்குமதி செய்து விநியோகிப்பதற்கான அனுமதியை நிறுவனம் பெற்றுக் கொண்டுள்ளது.

டேவிட் பீரிஸ் ஓட்டோமொபைல்ஸ் நிறுவனம் இரண்டு பதிப்புக்களை – அடிப்படையான அம்சங்களுடன் BAIC X55 II Honour வாகனத்தையும், முழுமையான தெரிவுகளுடன் BAIC X55 II Luxury வாகனத்தையும் அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்த நிகழ்வில் கருத்துத் தெரிவித்த டேவிட் பீரிஸ் குழுமத்தின் தலைவரும், முகாமைத்துவப் பணிப்பாளருமான ரோஹன திசாநாயக்க,

“டேவிட் பீரிஸின் வாகன மரபானது புத்தாக்கமான கண்டுபிடிப்புக்களால் உடைத்தெறியப்பட்டுள்ளது. இலங்கையில் BAIC X55 II வாகனத்தை அறிமுகப்படுத்துவதானது குறிப்பிடத் தக்க ஒரு வெற்றியாகும். ஓட்டுநர் அனுபவத்தை மாற்றும் முன்னேற் றமான மற்றும் அடுத்த தலைமுறைக் கான அம்சங்களைக் இலங்கை ஓட்டுனர்கள் இதன் மூலம் அனுவிக்க முடியும்” – என்றார்

டேவிட் பீரிஸ் ஓட்டோமொபைல்ஸ் நிறுவனத்தினால் சந்தைப்படுத்தப்படும் புத்தம் புதிய BAIC X55 II வாகனங்கள், 5 ஆசனங்களைக் கொண்டதாகவும், 1500 சிசி டேர்போ இன்ஜின்ஸ், 7DCT பரவல், எரிசக்தியாகப் பெற்றோல் பயன்படாட்டைக் கொண்டதாகும். 19” அலோ வீட்லஸ், அகல்பரப்பக் கூடிய சூரியக் கூரை, தானியங்கியாக மேல் எழக்கூடிய கதவுப் பிடிகள், இரட்டை புகைப்போக்கி என்பன அதன் அழகை மேலும் மெருகூட்டுகின்றன.

டேவிட் பீரிஸ் ஓட்டோமொபைல்ஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் மகேஷ் குணதிலக விளக்கமளிக்கையில்,

“ஓட்டுநர் அனுபவம் நிச்சயம் தரமானதாக இருக்கும். அறிவார்ந்த பாதுகாப்பு அம்சங்களுடன், அடப்டிவ் க்ரூஸ் கொன்ரோல், ஒழுங்கையிலிருந்து வெளிச்செல்லும்போதான

எச்சரிக்கை, முன் ஆசனத்தின் கீழான சூடாக்கி மற்றும் காற்றோட்டம், சாரதி ஆசனத்தின் நினைவகம், பின் ஆசனத்தின் கோணமாக சீர் செய்யக்கூடிய திறன், பல்வேறு வர்ணங்களைக் கொண்ட உள்ளக மின்குமிழ் அமைப்பு போன்ற பல்வேறு அம்சங்களை இது கொண்டுள்ளது.” – என்றார்.









# Certis Lanka தற்போது SITREK Group என மீள்வர்த்தக நாமமிடப்பட்டுள்ளது

ஒருங்கிணைந்த பாதுகாப்பு சேவைகளை வழங்குவதில் முன்னோடியான Certis Lanka, நான்கு தசாப்தங்களுக்கும் மேலான தனது பயணத்தில் முக்கியமானதொரு சாதனையாக SITREK Group என்ற தனது புதிய வர்த்தகநாம அடையாளத்தை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பான விமரிசையான நிகழ்வொன்று புகழ்மிக்க கொழும்பு சினமன் கிரான்ட் ஹோட்டலில் இடம்பெற்றது. விருந்தினர்கள், தொடர்புபட்ட பல்வேறு தரப்பினர், ஊடகவியலாளர்கள் இதில் கலந்து சிறப்பித்துள்ளனர்.

SITREK Group என்ற பெயர் மாற்றமானது கட்டமைப்பு, ஒருமைப்பாடு, நம்பிக்கை, பொறுப்புணர்வு, மகத்துவம் மற்றும் அறிவு ஆகிய தனது பிரதான விழுமியங்களில் நிறுவனம் காண்பிக்கும் அர்ப்பணிப்பை மீள உறுதிப்படுத்தும் வகையில் இந்த மூலோபாய நகர்வு அமைந்துள்ளது.

இந்த விழுமியங்கள் அனைத்தும் நிறுவனத்தின் பிரதான தூண்களாக காணப்படுவதுடன், முழுமையான இலங்கை நிறுவனமாக மாறுவதை நோக்கிய பயணத்தை முன்னெடுக்கின்ற அதேசமயம், வாடிக்கையாளர்களின் எதிர்பார்ப்புக்களை விஞ்சும் வகையில் இயங்குவதில் காண்பிக்கும் அர்ப்பணிப்பையும் பிரதிபலிக்கின்றது.

SITREK Group இன் குழும இணைமுகாமைத்துவப் பணிப்பாளர் மினோலி விஜேசிங்க நிகழ்வில் உரையாற்றுகையில்,

“SITREK Group என மாற்றம் காண்பது நிறுவனத்திற்கு பாரிய வாய்ப்பினை ஏற்படுத்துவதுடன், எதிர்கால விஸ்தரிப்பு மற்றும் வளர்ச்சிக்கு இடமளித்து, எமது வாடிக்கையாளர்களுக்கு இன்றும் வினைதிறனுடனும், செயல்திறனுடனும் சேவைகளை வழங்குவதற்குஎம்மைமேம்படுத்திக்கொள்ளவும் வழிவகுக்கின்றது.” – என்றார்.

SITREK Group இன் குழும இணைமுகாமைத்துவ பணிப்பாளர் ஜீவக விஜேசிங்க இந்த மீள்வர்த்தகநாமமிடலின் முக்கியத்துவத்தை சுட்டிக்காட்டி உரையாற்றுகையில்,

“எமது புதிய வர்த்தகநாம அடையாளமான SITREK என்பது எமது பயணத்தில் எம்மை வழிநடத்தியுள்ள அடிப்படைக் கோட்பாடுகளை அடியொற்றியதாக உள்ளது.” – என்றார்.



கனடா முரசு
பக்கங்கள் - 4
ஞாயிற்றுக்கிழமை 21/04/2024

## கனடிய கடவுச்சீட்டுக்கான தரநிலை வரிசை உயர்வு!

சர்வதேச ரீதியில் கடவுச் சீட்டுக்கள் குறித்த தரப்படுத்தலில் கனடிய கடவுச்சீட்டு முன்னேற்றத்தைப் பதிவு செய்துள்ளது. C2




# பாலஸ்தீனியர்களுக்கு ஆயிரம் விசாக்களை வழங்கும் கனடாவின் உறுதிமொழி காற்றில்!

கனடாவுக்கு தப்பி வருவதற்குள் காசாவிலிருக்கும் தங்கள் உறவினர்கள் உயிரிழந்து விடக்கூடும் என கனடாவில் வாழும் பாலஸ்தீன கனேடியர்கள் கவலை தெரிவித்துள்ளார்கள்.

இஸ்ரேல் - பாலஸ்தீன மோதல்களைத் தொடர்ந்து, பாலஸ்தீனத்தில் வசிக்கும் கனேடியர்களின் உறவினர்களுக்கு ஆயிரம் தற்காலிகக் குடியிருப்பு விசாக்கள் வழங்குவதாக கனடா பெடரல் அரசு ஜனவரி மாதம் அறிவித்திருந்தது.

ஆனால், அந்த அறிவிப்பு வெளியாகி மூன்று மாதங்களான பின்பும், இதுவரை பாலஸ்தீனத்திலிருந்து ஒரு கனேடியரின் உறவினர் கூட கனடாவுக்கு அழைத்த. வரப்படவில்லை என்கிறார்கள் கனடாவில் வாழும் பாலஸ்தீன கனேடியர்கள். C2

## எட்டோபிகொக் விபத்தில் ஐந்து பேருக்குப் படுகாயம்



ஒன்ராரியோ, ஏப்ரல் 21

எட்டோபிகொக் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் ஐவர் காயமடைந்துள்ளனர்.

நேற்றுக் காலை 3:45 அளவில் ஹைவே 27இல் இடம்பெற்ற இந்த விபத்தில் ஒரு பிள்ளை உள்ளடங்கலாக ஐவர் காயமடைந்துள்ளனர்.

இவர்களது காயங்கள் உயிருக்கு ஆபத்தற்றானவை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விடயம் தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## மகளிர் 100 மீற்றர் ஓட்டம் கனடாவில் புதிய சாதனை



ஒன்ராரியோ, ஏப்ரல் 21

கனடியப் பெண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப்போட்டியில் பபுதிய சாதனைப் படைக்கப்பட்டுள்ளது.

36 வருடங்களாக நீடித்த இந்த சாதனையை கனடாவின், கெட்டனுப பகுதியை சேர்ந்த பெண் ஒருவரே கடந்துள்ளார்.

இந்தப் பெண்ணின் பெயர் ஓட்ரே லெடுக் எனத் தெரிவிக்கப்படுகின்றது.



# ஒன்றாரியோவில் தமது சம்பள அதிகரிப்பிற்காக காத்திருக்கும் சிறுவர் பராய உதவி ஆசிரியர்கள்

ஒன்றாரியோவில் சம்பள அதிகரிப்பிற்காக உதவி ஆசிரியர்கள் தொடர்ந்தும் காத்திருக்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஒன்றாரியோவில் பதிவு செய்யப்பட்ட சிறுவர் பராய உதவி ஆசிரியர்களே இவ்வாறு சம்பள அதிகரிப்பிற்காகக் காத்திருக்கின்றனர்.

மாகாண அரசாங்கம் சம்பளங்களை அதிகரிப்பதாக வாக்குறுதி அளித்திருந்தது.

எனினும், இதுவரையில் சம்பளங்கள் அதிகரிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 2023 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல்வர் டக் போர்ட் தலைமையிலான அரசாங்கம் சம்பள அதிகரிப்பு வழங்குவதாக உறுதிமொழி வழங்கியிருந்தது.

மணித்தியாலமொன்றிற்கான சம்பளத்தை சுமார் 23.86 டொலர்களாக உயர்த்துவதற்கு உறுதியளிக்கப்பட்டிருந்தது.

எனினும் இதுவரையில் தமது சம்பளங்கள் அதிகரிக்கப்படவில்லை என ஆசிரிய உதவியாளர்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

# மனோர் பூங்கா அருகில் வீட்டில் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்




ஒன்றாரியோ, ஏப்ரல் 21

ஒட்டாவாவின் மனோர் பூங்காவிற்கு அருகில் வீட்டில் வைத்து 53 வயதான நபரொருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

பெர்க் அவனியு மற்றும் ஹெம்லொக்க வீதிக்கு அருகில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் அவசரப் பிரிவுக்கு அழைப்பு வந்துள்ளது.

சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் உயிருக்கு ஆபத்தான நிலையில் ஒருவரைக் கண்டனர். அந்த நபர் பின்னர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விடயம் தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

### கனடிய கடவுச்சீட்டுக்கான...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

உலகின் கடவுச்சீட்டுக்கள் குறித்த தரப்பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

சர்வதேச அளவில் சிறந்த கடவுச்சீட்டுக்களைக் கொண்ட நாடுகளின் தரவரிசையில் கனடா 7 ஆவது இடத்தை வகிப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா மற்றும் கனடா ஆகிய நாடுகளின் கடவுச் சீட்டுக்கள் உலகத் தரவரிசையில் 7 ஆம் இடத்தை வகிக்கின்றன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

2024 ஆம் ஆண்டுக்கான ஹென்லி கடவுச்சீட்டு சுட்டியின் அடிப்படையில் இந்தத் தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

கனடிய கடவுச்சீட்டு உடையவர்கள் 188 நாடுகளுக்கு வீசா இன்றிப் பயணம் செய்ய முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சில நாடுகளின் கடவுச்சீட்டுக்களைப் பயன்படுத்தி பயணங்களை மேற்கொள்ளும் போது பல்வேறு சவால்களை எதிர்நோக்க நேரிடுகின்றது.

எனினும் கனடிய கடவுச்சீட்டு உடைய ஒருவர் உலகின் அநேக நாடுகளுக்கு சுலபமாகப் பயணங்களை மேற்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2023 ஆன் ஆண்டில் உலக தர வரிசையில் கனடிய கடவுச்சீட்டு 8 ஆம் இடத்தை வகித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்த வருடத்தில் அது ஓரிடம் முன்னேறியுள்ளது.

### பாலஸ்தீனயர்களுக்கு...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சோகம் என்னவென்றால், அந்த திட்டத்தின் கீழ் கனடா வர விண்ணப்பித்திருந்த சிலர் உயிரிழந்துவிட்டார்கள்.

சிலர் எப்படி உயிரிழந்தார்கள் என்பதை கண்டுபிடிக்க மருத்துவ வசதிகள் இல்லாத நிலையில், சிலர் தாக்குதலில் உயிரிழக்க, உயிரிழந்தவர்களின் பிள்ளைகள், பயத்துடன், தனிமையில், கனடாவிலிருந்து பதில் வருமா எனக் காத்துக்கொண்டிருக்கிறார்கள்!



# சர்ரே வைசாகி கொண்டாடத்தில் அரை மில்லியன் பேர் திரண்டனர்

பிரிட்டிஷ் கொலம்பியா,ஏப்ரல் 21

பிரிட்டிஷ் கொலம்பியாவின் சர்ரே பகுதியில் இடம்பெற்ற வைசாகி கொண்டாடத்தில் அரை மில்லியனுக்கும் அதிகமானோர் கலந்து கொண்டுள்ளனர்.

இந்த நிகழ்வில் 550,000 பேர் கலந்து கொண்டனர் என சர்ரே பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த நிகழ்வின் போது இலவச உணவு, கொண்டாட்டங்கள் என்பன உள்ளடக்கப்பட்டிருந்தன.








# கனடியத் தொண்டு நிறுவனத்தின் டிரக் இஸ்ரேல் விமானத் தாக்குதலில் சேதம்

ஒன்ராரியோ, ஏப்ரல் 21

தமது பிரதான நீர் கொண்டு செல்லும் டிரக் இஸ்ரேல் விமானத் தாக்குதலில் காசாவில் பாதிக்கப்பட்டுள்ளதாக கனடிய தொண்டு நிறுவனம் ஒன்று தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் இஸ்ரேலுடன் கலந்துரையாடப்பட்டதாக சர்வதேச அபிவிருத்திக்கான அமைச்சர் அஹமட் ஹுசைன் தெரிவித்திருந்தார்.

சமூக ஊடகத் தளமான எக்ஸ் தளத்திலேயும் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட சமூகத்திற்கு உதவுவதற்கு துரித மற்றும் தடையற்ற மனிதநேய உதவி தேவையென கனடா தெரிவித்துள்ளது.

# சமூக ஊடகப் பிரபலங்களை பயன்படுத்தும் கனடிய அரசு!



ஒன்ராரியோ,ஏப்ரல் 21

இளம் கனடியர்களுக்கு தமது அரசாங்கத்தின் செய்திகளைக் கொண்டு சேர்ப்பதற்கு சமூக ஊடகத்தில் செல்வாக்கு நிறைந்தவர்களை கனடிய அரசாங்கம் பயன்படுத்தி வருகின்றது.

மத்திய அரசாங்கத்தின் வரவு – செலவுத் திட்டத்தின் முன்கூட்டிய வெளியீட்டிற்கு கனடாவின் சமூக ஊடக பிரபலங்களான மது மற்றும் கோர்டன், ஸ்டெப் மற்றும் டென் ஆகியோர் அழைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு தலா 750,000 பின்பற்றுவோர் இருப்பதுடன், இவர்கள் 18-34 வயதானப் பிரிவினரை இலக்கு வைப்பவர்களாவர்.



# ஒன்ராரியோ பூர்வீகக் குடிகள் பகுதியில் இராசாயன ஆலை ஒன்று மூடப்பட்டது!

ஒன்ராரியோ,ஏப்ரல் 21

ஒன்ராரியோ பூர்வீகக் குடிகள் பகுதியில் இராசாயன ஆலை ஒன்று மூடப்பட்டுள்ளது.

புற்றுநோயை ஏற்படுத்தக் கூடிய இரசாயனங்கள் இந்த தொழிற்சாலையில் இருந்து வெளியேறியமை அதற்கான முக்கிய காரணம் எனத் தெரிவிக்ககப்படுகின்றது.

இந்த ஆலை மூடப்பட்டமையை அதன் பிரதான நிறுவனம் ஏற்றுக் கொண்டுள்ளது.

எவ்வாறாயினும், இந்த நடவக்கைக்கான காரணம் தொடர்பில் சம்பந்தப்பட்டவர்கள் எந்த விடயத்தையும் இதுவரை தெரிவிக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.